Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 06 வெள்ளிக்கிழமை (18.02.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 141

## அத்துமீறிய இந்திய மீனவர் விவகாரம்; கனிமொழியுடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு




(வடமராட்சி)

அத்துமீறிய வகையில் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து இலங்கை மீனவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இலங்கை மீனவர்களால் பிடித்து வரப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பெயரில் விளக்கமறியலில் இருக்கும் மீனவர்கள் சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியுடன் தொலைபேசி ஊடாகப் பேச்சுக்களை நடாத்தியிருக்கின்றார். இந்திய மீனவர் பிரதிநிதிகளுக்கும், இலங்கை பிரதிநிதிகளுக்கும் பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்து சுமூகமான

(11ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் விவகாரம்


# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் அவசர கடிதம்



(யாழ்ப்பாணம்)

தமிழக அரசியலின் சிம்மாசனத்தில் இருந்து கொண்டு மத்திய அரசிலும் பங்கெடுத்து தமிழக மக்களுக்குச் சிறந்த வழிகாட்டலை வழங்குவது போன்ற வழிமுறையே ஈழத்தமிழ் மக்களுக்கும் ஏற்புடையது. அதையே நானும் பின்பற்றுகிறேன். ஆகவே கொள்கை வழியில் ஒன்றுபட்டு நிற்கும் நான் உங்களோடு அவசரமும், அவசியமும் மிக்க விடயம் ஒன்றை மனம் திறந்து பேசவிரும்புகிறேன். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக் கடிதத்தில் தெரிவித்துள்ளர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## யுத்தத்தின் போது பாலியல் வல்லுறவு; அதுவும் கூட யுத்தக்குற்றம்தான்!

### ஐ.நா.பெண் உரிமை பேணும் குழு அரசுக்கு அழுத்தம்



(கொழும்பு)

வன்னியில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் உட்பட எல்லாப் போர்க்குற்றங்களும் விசாரணை செய்யப்பட்டு குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என பெண்கள் பாரபட்சமாக நடாத்தப்படுவதை இல்லாது ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழு (The Committee on the Elimination of Discrimination against Women - CEDAW Committee) இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்திருப்பதைப் போல வன்னிப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் மற்றும் பெண்ணுரிமை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்களின் சரமாரியான கேள்விக்கணை பதிலளிக்க மறுத்துவிட்டார் ஐ.தே.க.வின் பிரதித்தலைவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் விஜயம் செய்தபோது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க அவர்கள் தயாராகவிருக்கவில்லை.

நேற்று காரைநகருக்கு ஐ.தே.கட்சியினர் வருவது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு ஊள்ளூர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க்குற்றங்கள் விசாரணைக்கு பிரிட்டன் ஆதரவு

### இவ்வாறு அறிவிக்க கோருகின்றது பிரிட்டிஷ் எம்.பி.கள் குழு

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங் கள் தொடர்பான சுதந்திரமான, சர்வதேச விசாரணைக்கு பிரட்டிஷ் அரசு முழு ஆதரவளிப்பதாகத் தெரிவிக்க வேண்டும் என்று பிரத்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேர் கூட்டாக இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இலங்கையின் (11ஆம் பக்கம் பார்க்க)

## நட்புறவுடன் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு இந்திய வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் இன்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

இவ் விவகாரம் குறித்து இந்திய வெளிவிகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கையின் வெளிவிகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய போதே (11ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே!**

உள்ளே 'கல்வி முரசு'

- தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 ஏற்கனவே வெளியான பகுதி I, பகுதி II வினாத்தாள்களுக்குரிய விடைகளும், புள்ளியிடலும்.
- விசேட பயிற்சிப் பரீட்சை-தமிழ்மொழி கற்றலுக்கான குறிப்புகளும்.
- உங்கள் பிரதிக்கு முந்திக் கொண்டு விற்பனை முகவரை நாடுங்கள்.

# நெடுந்தீவு–குறிகாட்டுவான் போக்குவரத்து; "குமுதினி" படகுச் சேவை இன்று முதல்!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்துப் படகான 'குமுதினி' நாளை முதல் சேவையில் ஈடுபடவுள்ளது.

குமுதினிப் படகின் திருத்த வேலைகள் நிறைவடைந்ததையடுத்தே இந்தப் படகு சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. ஏற்கனவே நெடுந்தீவு- குறிக்காட்டுவான் போக்குவரத்துக்கென வடதாரகை புதிதாக இணைந்துள்ளதால், தீவுப் பகுதிகளுக்கான போக்குவரத்து பெருமளவு சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் மேலதிகமாக புதிதாக திருத்தியமைக்கப்பட்ட குமுதினி படகின் மேல் கூடாரம் மக்கள் தமது இருக்கைகளைப் பயன்படுத்த முடியாதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது படகு சிறந்த முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக படகில் திருத்த வேலைகளைச் செய்த ஊழியர்கள் தெரிவித்தனர்.



தற்போது சேவையில் இணைதுக்கொள்ளப்படவுள்ள இந்தப் படகில் வியாபார நோக்கில் பெருமளவான பொருள்கள் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலானளவு பொருள்களை ஏற்றுவதனாலேயே படகு அடிக்கடி பழுதடைவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேநேரம், நெடுந்தீவு-குறிகாட்டுவான் கடல் போக்குவரத்துச் சேவைக்கான புதிய படகு வடதாரகை கடந்த 14ஆம் திகதி சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சரஸ்வதி வீதி புனரமைப்பு

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி வீதியைப் புனரமைப்பதற்கு முன்னேற்பாடாக கற்கள் பறிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வீதி கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதாக அண்மையில் 'தினமுரசு' சுட்டிக்காட்டியது.

இதன் பயனாக வீதியைப் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (25)

## சிறப்புற நடந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி மாலை வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி கே. கணேசானந்தன் கலந்து கொண்டதுடன், பரிசில்களை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசானந்தன் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த மெய்வல்லுநர் போட்டியில் 437 புள்ளிகளைப் பெற்று 'குட்சைல்ட்' முதலாமிடத்தையும், 337 புள்ளிகளைப் பெற்ற 'ஹோபன்காடன்' இல்லம் இரண்டாமிடத்தையும் 321 புள்ளிகளைப் பெற்று 'பேஜ்' இல்லம் மூன்றாவது இடத்தையும், 253 புள்ளிகளைப் பெற்ற 'கார்டர்' நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (20)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சண் வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்), முருகேசு சந்திரகுமார் மற்றும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன் (கமல்) நல்லூர் பிரதேச அமைப்பாளர் அம்பலம் இரவீந்திரதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உதவியாளர்கள் நியமனம்

(அச்சுவேலி)

வடக்கு மாகாண சபையிலுள்ள காணி நிர்வாகத் திணைக்களத்தில் கடமையாற்றி வந்த ஐந்து நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு பொது நிர்வாக அமைச்சின் 16/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைவாக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் பிரதேச காணிப்பயன்பாடுகள் சம்பந்தமான வேலைகளை மேற்கொள்வதற்காக காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் தில்லையம்பலவாணர் விமலன்(கோப்பாய் பிரதேச செயலகம்), திருமதி செல்வகுமார் சிவலட்சமி (கரவெட்டி பிரதேச செயலகம்), திருமதி ரி.ஜெயவதனா (சாவகச்சேரி பிரதேச செயலகம்), திருமதி நகுலாதேவி பத்மராசா (பருத்தித்துறை பிரதேச செயலகம்), திருமதி திலகராணி ஜெயக்குமார் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரே நியமனம் செய்யப்பட்டவர்களாவார்.

2010ஆம் ஆண்டுவரை இத்திணைக்களம் காணி அமைச்சின் கீழ் ஒருபிரிவாக செயற்பட்டு தற்போது தனியானதொரு திணைக்களமாக செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (03)

## மன்னார் பாடசாலைகள் மீண்டும் வழமைக்கு

(அச்சுவேலி)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்படைந்திருந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மீண்டும் வழமை நிலைக்கு திரும்பி வருவதாக அப்பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்ததைத் தொடர்ந்து வான்கதவுகள் திறக்கப்பட்டமையால் குடிமனைகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையால் மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் இயங்க முடியாது இருந்ததுடன் , பல பாடசாலைகளில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது வெள்ளநீர் வழிந்தோடி நிலைமை சீரடையத் தொடங்கியுள்ளதால் பாடசாலைகளில் தங்கியிருந்த மக்களும் அப்பகுதிகளை விட்டு அகன்றிருப்பதால் கற்றல் செயற்பாடுகள் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்களை உடன் விண்ணப்பிக்க கோரிக்கை

(இருபாலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். மாவட்டக்கிளையின் ஊடாக யாழ் போதனா வைத்தியசாலையில் சேவைபுரிந்து வந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் சுகாதார அமைச்சினால் வைத்திய ஊழியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டதனால், அவர்களின் வெற்றிடத்துக்கு செஞ்சிலுவைச்சங்கத்தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால் இச்சேவைக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் இலங்கைச் செஞ்சிலுவைப் பிரிவுகளில் உள்ள தொண்டர்கள் தங்கள் பிரிவுக் கிளையின் சிபார்சுடன் நாளை தமது விண்ணப்பங்களை பிரிவு ஊடாக சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இது விடயமான சுற்று நிருபம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சகல பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளையின் மாவட்ட செயலாளர் குலசேகரம் பிள்ளை பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இச் சேவைக்கு செஞ்சிவைச்சங்க தொண்டர்களே விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## "ஆறுதல்" நிறுவனத்தின் டிப்ளோமா கற்கைநெறி

(தென்மராட்சி)

'ஆறுதல்' நிறுவனத்தால் தென்மராட்சியில் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியில் வளவாளர்களாகக் கற்பிப்பவர்களை நாளை சனிக்கிழமை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்கபற்றும்படி மேற்படி டிப்ளோமா இணைப்பாளர் சு.பாக்கியராஜா தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலில் பேராசிரியர் கே. சின்னத்தம்பி, கலாநிதி ரி.கலாமணி ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்ள உள்ளனர். (11)


நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்
மாபெரும் மலிவு விற்பனை
பட்டுச்சாறிகள் சில்க்ஸ் சாறிகள் பஞ்சாபிகள் கொட்டன் சாறிகள் பஞ்சாபித் துணிகள்
ஏராளம்! ஏராளம்!
அலை அலையாக வாரீர் !!
காலம்:- இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே (20.02.2011 வரை)
இடம்:-நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக (முடமாவடி)
நேரம்:- காலை 9.30 மணிமுதல் இரவு-8:30 மணிவரை.
வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!
எங்குமே காணாத அதி சிறப்புத் தள்ளுபடி

(C/505)

*மனிதகுலத்தை விட உயர்ந்தது எதுவும் இல்லை. எவனும் தன்னை இழிவாக எண்ணுதல் கூடாது. தன்னை இழிவாக எண்ணுபவன் எப்பொழுதும் வெற்றி அடையமாட்டான்.*

*-மகாபாரதம்-*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## 'பிரச்சினையை' வளர்க்காதீர்கள்

இந்திய கடற்பரப்பைத் தாண்டி வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 112 இந்திய மீனவர்களை வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்துப் பிடித்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், அவர்களின் 18 இழுவைப் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவது என்பது இன்று நேற்று நடந்து வரும் விவகாரமல்ல.

இவர்களின் இந்த அத்துமீறலானது காலா காலமாக அடிக்கடி இடம்பெற்றுவரும் ஒரு விபத்துச் சம்பவமாகும்.

அத்துமீறி நுழையும் இந்த மீனவர்களால் எமது மீன்வளம் சுரண்டப்பட்டு வருகிறது. இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதை அவதானிக்கமுடிகிறது.

எந்த அத்துமீறல் சம்பவமாக இருந்தாலும் அதற்கான காரண காரியங்களை ஆராய்ந்து பார்த்து அவற்றுக்கு சுமுகமான தீர்வொன்றை எட்ட வேண்டியது அவசியமாகிறது.

அத்துமீறி நுழையும் இந்த மீனவர்கள் விவகாரம் தொடர்பில் இலங்கை, இந்திய அரசாங்கங்களின் உயர்மட்ட அதிகாரிகள் தமக்குள் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு சுமுகத் தீர்வை எட்டிவருவது வழக்கம்.

இந்த சுமுகத் தீர்வின் மூலம் ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கான காரணம் என்னவென்று கண்டறியப்பட வேண்டும்.

இவர்களது இத்தகைய செயல்கள் வடமராட்சி மற்றும் மாதகல் பகுதியை அண்டிவாழும் மீனவர்களைப் பாதித்துவருகிறது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் தமது வறுமை நிலையின் நிமித்தமோ அன்றி, குறுகிய அரசியல் லாப நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளின் பின்னணியில் நின்று செயற்படுகிறார்களோ என்றும் கூறமுடியாதுள்ளது.

தேர்தல்களை மையமாகக் கொண்டு செயற்படுபவர்களின் தூண்டுதலின் பேரில் இவை நடைபெற்று வருமானால் இவற்றோடு சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையிலான ஆரோக்கியமான நல்லுறவு பாதிக்கவே செய்யும்.

இம்மீனவர்களின் கைது தொடர்பாக வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி ஆர்ப்பாட்டங்கள் செய்வதால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் தாம் தவறு செய்து விட்டதாகவும், தம்மை மன்னிக்குமாறும் கோரிக்கை விட்டிருப்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும்.

இவர்களைப் பிடித்த வடமராட்சி மீனவர்கள் இவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்துவருவதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்.

இம்மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசியல்வாதிகள் யாராயினும் குளிர்காய முற்பட்டால் அது இலங்கை - இந்திய நல்லுறவுக்குப் பாதகமாகவே அமையும் என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும்.

எனவே தொடரும் இந்திய மீனவர் பிரச்சினையை மேலும் வளரவிடாது ஆரோக்கியமான தீர்வை இரு அரசுகளும் இணைந்து காண முன்வர வேண்டும்.

- ஆசிரியர் -

# இந்திய மீனவர்களின் சிறைப்பிடிப்பென்பது அத்துமீறிய நடவடிக்கையின் உச்சக்கட்டமே

## கடற்றொழில் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளின் உச்சக்கட்ட நடவடிக்கையின் விளைவாகவே கடந்த இரு நாட்களில் வடமராட்சிக் கடற்பரப்பிலும் மாதகல் கடற்பரப்பிலும் வைத்து இந்திய மீனவர்கள் யாழ்.மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மைக்காலமாக இக்கடற்பரப்புகளில் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் அத்து மீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தன.

இதன் காரணமாக எமது பகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் மீன்பிடிவலைகளும் சேதப்படுத்தப்பட்டும் வந்தது. இதனால் எமது மீன்பிடி வளம்குறைந்து அதனை நம்பி வாழும் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். இவ்வாறான சூழலில் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு மட்டங்களில் சம்மேளனத்தினால் அவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் பலன் எதுவும் ஏற்படவில்லை. மேலும் மேலும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வந்தது. இதனைப் பொறுத்துக் கொள்ளாத எமது மீனவர்கள் ஒன்றுசேர்ந்து இந்திய மீனவர்களைச் சிறைப்பிடித்ததுடன் அவர்களது படகுகளையும் கைப்பற்றியுள்ளனர். இப்படகுகள் பருத்தித்துறை கடற்தொழில் சமாசத்தின் பார்வையில்வைக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இப்படகுகளின் ஓட்டிகள் படகின் இயந்திரத்தை சரிபார்க்கவும் நீரை வெளியேற்றவும் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் எமது மீனவர்களின் பாதுகாப்புக்குறித்து சமாச மட்டத்தில் கூடிக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

## ஐ.ம.சு.மு வேட்பாளர்களுடனான சந்திப்பு இன்று வவுனியாவில்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, வெண்கல செட்டிக்குளம் ஆகிய 4 பிரதேச சபைகளில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களுடனான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைத்தொழில் வர்த்தக வாணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் தலைமையில் இடம்பெறும் இச்சந்திப்பில் வேட்பாளர்களுக்குத் தேர்தல் பிரசாரங்களை எவ்வாறு முன்னெடுப்பது, தேர்தல் நடைமுறைகள், வாக்களிப்பதற்கு மக்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கப்படவுள்ளது. (39)

## அடுத்த வருடம் முதல் அமுலாகின்றது பாடவிதானத்தில் போஷாக்குக் கல்வி

(கொழும்பு)



சரியான போஷாக்கு, சிறந்த உணவு, முறையான வாழ்க்கை என்பன தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கும் வகையில் அடுத்த ஆண்டு முதல் பாடவிதானத்தில் சேர்ப்பது தொடர்பாக பரிசீலித்து வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சருடனும் தேசிய கல்வி நிறுவகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். சரியான உணவுப்பழக்கங்களை அனுசரிக்காமையே உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுவதற்குக் காரணம். அத்தோடு பாடசாலை மாணவர்கள் மத்தியில் போஷாக்கு பிரச்சினைகள் தலைதூக்கியிருக்கின்றன.

10முதல் 15 வீதமான மாணவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். போஷாக்கின்மையால் மாணவர்கள் குழுவொன்று கண் மற்றும் பல் நோயினால் அவதியுற்றுள்ளது.

எனினும் இத்தகைய நிலைமைக்கு பரிகாரம் காண்பது உத்தேசத்திட்டத்தின் நோக்கமாகும். பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைச் சட்டம் வலுப்படுத்தப்படவுள்ளது. பல பாடசாலைகளில் விநியோகிக்கப்படும். உணவு போதிய போஷாக்குத் தரத்தை கொண்டிருக்கவில்லை. எனவே இது தொடர்பாக கல்வி அமைச்சு தகுந்த குழுக்களுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் உரிய சுற்றுநிருபம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 74197 உல்லாசப் பயணிகள் ஜனவரி மாதத்தில் வருகை

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் மட்டும் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக 74ஆயிரத்து 197 பேர் வருகை தந்ததாகவும், இது 46.2 வீதமெனவும், உல்லாசப் பயணத்துறை அறிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட உல்லாசப் பயணிகளில் 32 ஆயிரத்து 627 பேர் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் 13 ஆயிரத்து 786பேர் இந்தியாவிலிருந்தும் வருகை தந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகளாக வருபவர்களின் எண்ணிக்கை 53.7 வீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து 9518 பேர் கடந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ளனர். இது 15.7 வீதமாகும். ஜேர்மனியிலிருந்து 5543 பேரும் (24 வீதம்) பிரான்ஸிலிருந்து 4544 பேரும் (100வீதம்) நெதர்லாந்திலிருந்து 2944 பேரும் (103 வீதம்) வருகைதந்துள்ளனர்.

அதேபோன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து 1640 பேரும் (16.7வீதம்) ரஷ்யாவிலிருந்து 1940 பேரும் (02 வீதம்) வருகை தந்தனர்.

கிழக்காசிய நாடுகளிலிருந்து 7269 பேர் (53.7வீதம்) வருகை தந்துள்ளனர். இதில் நீனாவிலிருந்து 1606 பேரும் (155.3வீதம்) ஜப்பானிலிருந்து 1429 பேரும் (16.5 வீதம்) மலேசியாவிலிருந்து 1070 பேரும் (41.9 வீதம்) சிங்கப்பூரிலிருந்து 1027 பேரும் (87.1 வீதம்) வந்திருந்தனர்.

தென்கிழக்கு ஆசியநாடுகளிலிருந்து 17900 பேர் வந்தனர் இது 42.9 வீதமாகும். இதில் இந்தியர் கள் மட்டும் 13,786 பேரும் (50.8 வீதம்) மாலை தீவிலிருந்து 2817 பேரும் (17.1 வீதம்) பாகிஸ்தானி லிருந்து 890 பேரும் (32.6வீதம்) அடங்குவதுடன் அவுஸ்ரேலியாவி லிருந்து 3588 பேர் (41வீதம்) வந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்த்திருவிழா

(வவுனியா)

வவுனியா றம்பைக்குளம் ஸ்ரீ கருமாரி நாகபூசனி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது.

இவ் உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொண்டதுடன் கற்பூரச்சட்டி, காவடி எடுத்துத் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினார்கள். (39)

# ஆசிரியர்கள் ஆற்றும் மகத்தான பணியை மாணவர்கள் மதிக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அறிவுரை

(அச்சுவேலி)


மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும், கல்வியுடன் இணைந்த பிறச்செயற்பாடுகளுக்கும் தேவையான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொடுக்க என்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் குடாநாட்டுச் சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கு என்றும் உற்ற துணையாகச் செயற்படுவேன். குடாநாட்டு மாணவர்களின் பாரம்பரிய பண்பாட்டுச் சொத்தாகிய கல்வியைத் தொடர்ந்தும் கட்டிக்காத்து வருவதில் பாடசாலைகள் ஆற்றிவரும் செயற்பாடுகளை மனதாரப் பாராட்டுகிறேன் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் ஆர். இராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சிறப்புமிக்க பாடசாலையாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி செயற்பட்டு வருவதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர்கள் ஆற்றிவரும் மகத்துவமான பணியினை அனைவரும் ஏற்று அவர்களை மதித்து நடக்க வேண்டும். எமது பிள்ளைகளின் கல்விக்குரிய அனைத்து வளங்களும் இடையூறு இன்றி அவர்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டும். கல்வியுடன் மாணவர்களின் விளையாட்டுத் திறனும் மேம்படையும் என்பதற்குச் சான்றாக இன்றைய இந்த விளை



யாட்டு நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன், எமது கல்விக்காக அரசு வழங்கி வரும் உதவிகளுக்கு நாம் எமது நன்றிகளையும் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றார். (03)

## நெல் அறுவடை மும்முரம்

(ஊர்காவற்றுறை)

வலி.மேற்கு பிரதேச பகுதிகளான மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, பறாளாய் ஆகிய பகுதிகளில் நெல் அறுவடையில் அப்பகுதி விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் ஏற்பட்ட மழைக் காலநிலை மாற்றம் அடைந்தமையினைத் தொடர்ந்து நெல் அறுவடையில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,

நெல் அறுவடையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பெரும தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அவர்களின் சம்பளமும் ஒரு நாளைக்கு ரூபா 1100 வரை உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ்.திரிலிங்கநாதன் கலந்துகொள்ளவுள்ளதுடன், மருதங்கேணி கல்விக்கோட்ட ஆலோசகர் சி.பொன்னையா சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிகவுள்ளார். (மி, 18)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நால்வருக்கு 64 ஆயிரம் ரூபா தண்டம்

(கரணவாய்)

பருத்தித்துறையிலுள்ள சில பிரதேசங்களில் சட்டவிரோத மின்சாரத்தைப் பெற்ற நால்வருக்கு பருத்தித்துறை நீதிமன்றத் தால் தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நெல்லியடிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது வதிரி மற்றும் மாலுசந்தியில் தலா ஒருவரும், இராஜ கிராமத்தில் இரண்டு பேரும் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நால்வரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் குறித்த நால்வரும் தலா 16 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்த வேண்டும் என உத்தரவிட்டார். (18)

## சேவலாக மாறும் பேட்டுக் குஞ்சுகள்

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் விற்கப்படும் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் சேவலாக மாறுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வியாபாரிகள் சிலர் கால் நடையாகவும் மற்றும் பொது இடங்களிலும் கோழிக் குஞ்சுகளுக்குச் சாயம் பூசிவிட்டு பேட்டுக் குஞ்சுகள் என விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் அக்குஞ்சுகள் வளர்ந்து சேவலாக மாறி விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பேட்டுக் குஞ்சுகள் என்று வாங்கி அதைப் பராமரித்து வளர்த்த பொதுமக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (25)



துன்னாலை, போதராமடம் அம்மன் சனசமூக நிலையம் 2010 ஆம் ஆண்டு சிறந்த செயற்பாட்டைக் கொண்ட சனசமூக நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் வரதீஸ்வரன் அதற்கான பரிசில் வழங்கி கௌரவிப்பதையும், அருகில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் ஆ.குலநாதன் மற்றும் பலரும் நிற்பதையும் படத்தில் காணலாம். (100)

# மெற்றாஸ்மயில் உறங்காத மனிதன் எதனையும் சாதிக்கும் ஆற்றல் உள்ளவர்

## மாகாண கல்விப் பணிப்பாளர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

அமரத்துவம் அடைந்தவரும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளரும் நீண்டகாலமாகத் தீவக கல்வி வலயத்தின் நிர்வாக அதிகாரியுமாகப் பணியாற்றியவருமான மெற்றாஸ் மயில் கல்வித் திணைக்களத்தின் ஊடாகப் பாரம்பரிய கலை வடிவங்களைப் பாடவிதானத்தில் இடம்பெற வைப்பதற்காக அயராது பாடுபட்டார்.

இவ்வாறு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய மெற்றாஸ் மயிலின் முதலாம் வருட நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றிய வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடாந்து தெரிவித்ததாவது-

மெற்றாஸ்மயில் எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அந்தப் பணியைச் செய்து முடிக்கும் வரை உறங்குவதில்லை. அவர் ஒரு உறங்காத மனிதனாக இருந்தார். அந்தளவிற்கு அவருக்கு வேலைப் பழு இருந்தது.

அவரது கலைத்துறை, நாடகத்துறை மற்றும் பாரம்பரிய கலைச் சேவைக்கு அப்பால் சென்று பாரம்பரிய கலை வடிவங்களை கல்வியமைச்சின் பாடத்துறைகளில் இடம்பெறச் செய்தவர்.

தற்பொழுது தமிழ்த் தினப் போட்டிகளில் கிராமியக் கலைகள், நாடகங்கள், நாட்டுக் கூத்துகள் இடம்பெற்று வருவதைக் காணலாம். தீவகத்திலும் கிளிநொச்சியிலும் தொலைந்து போன சுயவிபரக் கோவைகளைப் புதிதாக ஆக்கிய நிர்வாகத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

பாரம்பரிய கூத்துக் கலைஞர்கள் பலர் வயதான காலத்தில் வீட்டுக் கோடிகளில் தனியாகவிடப்பட்டு இருந்ததைக் கண்டு வேதனைப்பட்ட கலாபூஷணன் மெற்றாஸ்மயில் அவர்களை மீண்டும் மேடைக்குக் கொண்டு வந்து கௌரவித்து புத்துணர்வு அளித்ததைக் கண்டுள்ளோம்.

இதே மேடையில் அவர்களுக்குப் பாராட்டு விழாக்கள் வைத்து, பணப்பரிசில் கொடுத்து மகுடம் சூட்டிய பொழுது இந்த மண்டபம் பார்வையாளர்களால் நிறைந்திருந்தது.

"மூத்த கலைஞர்கள்" வரலாறு என்ற நூலை எழுதி வெளியிட்டு கலையையும், கலைஞர்களையும் கௌரவித்தவர் என்றார். 23)

## வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு கோண்டாவில் தென் மேற்கு மக்கள் உதவி

(தொல்புரம்)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கோண்டாவில் தென்மேற்கு கிராம மக்களால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகை உணவுப் பொருட்கள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் வேண்டுகோளையடுத்து, கோண்டாவில் தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், நித்திலம் சிறுவர் கழகம் ஆகிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் உணவுப் பொருட்களின் சேகரிப்பில் ஈடுபட்டன.

சோப் வகைகள் மற்றும் தண்ணீர்ப் போத்தல் என்பன பெருமளவில் சேகரிக்கப்பட்டதாகவும பொதுமக்கள் பலரும் இச் செயற்பாட்டுக்கு ஆர்வத்துடன் பங்களிப்பு நல்கியதாகவும் சமுர்த்திச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (26)

## நீண்ட நாட்களுக்குப் பின் சுற்றுலாப் பயணிகள் வருகை

(நல்லூர்)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

புதன், வியாழன் விடுமுறையைப் பயன்படுத்தி இந்தப் பயணிகள் யாழ்.வருகை தந்ததனால் நகரில் திடீரென நெரிசல் ஏற்பட்டுக் காணப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழையினாலும், வெள்ளப் பெருக்கினாலும் கடந்த வருட இறுதியிலும் இவ்வாண்டு ஜனவரியிலும் பயணிகள் வருகை பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. (25)

## 1008 சங்காபிஷேகம்

(வடமராட்சி)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் 1008 சங்காபிஷேகம், மாசி மக நாளான இன்று விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்றையதினம் அதிகாலை 1 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி காலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத்துடன் நிறைவு பெறவுள்ளது.

கடந்த 8ஆம் திகதி தொடக்கம் விசேட அர்ச்சனைகள் நடைபெற்று வருகின்றன. (100)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மனிதாபிமானப் பணிகள் தொடரும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரினால் பின்தங்கிய பகுதிகளுக்கு நடாத்தப்படும் நடமாடும் மருத்துவ சேவைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்குமென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.


சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். குடாநாட்டிலிருந்து தமது அலுவலகங்களை எதிர்வரும் மார்ச் மாதமளவில் மூடிச்செல்லும் நிலை உள்ளது.

அவர்கள் இங்கிருந்து அலுவலகத்தை மூடிச் சென்றாலும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் யாழ். கிளையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற நடமாடும் மருத்துவ சேவைக்கான உதவிகள், பல்வேறு காரணங்களுக்காக தடுப்பில் உள்ளவர்களைப் பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்களுக்கான உதவிக் கொடுப் பனவுச் சேவை மற்றும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கான உதவிகள் என்பன தொடர்ந்தும் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு பணிமனையூடாகவும், வவுனியா பணிமனை ஊடாகவும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். பணிமனையின் அலுவலகப் பாவனைத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன யாழ். போதனாவைத்தியசாலைக்கும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைப் பணிமனைக்கும் மற்றும் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கும் பகிர்ந்து வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)





யாழ். சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் அமர்வு ஒன்று நேற்று முன்தினம் யாழ். உயர்கலைக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 'ஆசியாவில் இலங்கைப் பொருளாதாரத்தின் பலமும் பலவீனமும்' என்ற தலைப்பில் பொருளியல்துறை விரிவுரையாளர் செ.சந்திரசேகரம் உரையாற்றுவதனையும், இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிய வேல்ரஞ்சன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (பா)

## நீண்ட காலமாகத் திருத்தப்படாத அச்சுவேலி மத்திய பஸ் நிலையவீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி மத்திய பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள பிரதான வீதி மிக நீண்ட காலமாகத் திருத்தியமைக்கப் படாமையினால் அப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்களும், பஸ்நிலையத்திற்கு வரும் பொதுமக்களும் பெரும் இடையூறுகளுக்கு மத்தி யல்பயணம் செய்ய வேண்டியிருப்பதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

மத்திய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள வீதிப் பகுதி கற்கள் கிளறுண்டு மிகப் பெரும் குழிபோல உள்ளமையால் அப்பகுதியால் செல்வது மிகவும் சிரமமாக உள்ளதுடன், சிறு மழை பெய்கின்ற வேளைகளிலேயே அக்குழிகளில் மழைநீர் வழிந்தோட முடியாது தேங்கி விடுவதால், அது பயணிகளுக்கு மேலும் இடையூறாய் இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே இவ்விடயத்தில் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் நலன்களைக் கருத்தில் எடுத்து உரியவர்கள் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (03)

## விஸ்தரிப்பு

(பாஷையூர்)

பாஷையூர் மீன் ஏல விற்பனை நிலையம் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. மீன் விற்பனைச் சந்தைக்கு அருகில் இருக்கும் இந்த ஏல விற்பனை நிலையத்தில் இடநெருக்கடிகள் ஏற்பட்டதை அடுத்து விஸ்தரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் மீன் சந்தைக்கு உட்புறமாகவுள்ள நடைபாதைகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. (25)

## நான்காவது இசைத்தொகுப்பு வெளியீட்டு விழா நாளை

(கொழும்புத்துறை)

இலங்கை, இந்திய கலைஞர்களின் தயாரிப்பில் உருவான 'நல்லவரே' என்ற நான்காவது இசைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அமலமரித் தியாகிகள் மாகாண சபையின் முதன்மை ஆலோசகர் அருட்பணி சந்திரபோஸ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் பிலிப் அடிகளும், வெளியீட்டுரையை வவுனியா அமலமரித் தியாகிகள் சபையின் இயக்குநர் அருட்தந்தை தேவராஜ அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர். (52)

## பாடசாலை தளபாடங்கள் யுனிசெவ்வால் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு வலய ரீதியாக 1000 தள பாடங்களை ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்புத் திட்டம் (யுனிசெவ்) வழங்கி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக யாழ்.வலயத்திற்கும் வலிகாமம் வலயத்திற்குமான தளபாடங்களின் ஒரு தொகுதி எடுத்துவரப்பட்டு, பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஏனைய வலயங்களுக்குமான தளபாடங்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட வுள்ளதாகத் தெரியவருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கான கதிரைகள், மேசைகள் ஆசிரியர்களுக்கான கதிரைகள், மேசைகள் மற்றும் தள பாடங்களும் இதில் அடங்கியுள்ளன. மேலும் தளபாடங்கள் தற்காலத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டவையாக உள்ளன.(பா)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(கந்தர்மடம்),

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (30)

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் அருட் சகோதரி மரிய ரொசாரியோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிறேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம் மற்றும் 511 ஆவது படைப்பிரிவின் அச்செழு முகாம் கட்டளை அதிகாரி பிரிகேடியர் கீர்த்திகொஸ்ரவும், கௌரவ விருந்தினராக அச்சுவேலி பங்குத்தந்தை அருட்திரு ஜெ.அன்ரனி பாலாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

## நாடக அரங்கேற்றம்

(தும்பளை)

2011 ஆம் ஆண்டில் இந்திய தேசிய நாடக விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த நாடகமான 'மகராக்ஷயர்' (The Dragon) நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல சிங்கள நாடக நெறியாளரான தர்மசிறி பண்டார நாயக்க இந்நாடகத்தை நெறியாள்கை செய்துள்ளார்.

இந்நாடகம் சோவியத் நாடகாசிரியர் யெவ்கினி ஷ்வார்ட்ஸ் ரஷ்யமொழியில் எழுதிய நாடகமாகும்.

பிரவேசம் இலவசம் என நாடகத்திற்கான ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (62,52)

## ஆதினியின் இன்றைய பலன்
(18.02.2011 - வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 06

இராகுகாலம் 11.02- 12.32, சுபநேரம் 6.32 -8.02, பூரணை பி.ப.2.48, மகம், மரணயோகம் பி.இ.4.18, மாசி மகம், பூரணை விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- மேடம்:- நண்பர் பகை, பகைவர் வெறுப்பு, அகால போசனம்.
- ரிஷபம்:- பொருள் இழப்பு, திருடர் பயம், எதிலும் தோல்வி.
- மிதுனம் :- மருத்துவச் செலவு, வீண் பலம், மனச் சஞ்சலம்.
- கடகம்:- அயலவர் மதிப்பு. விவேகமான செயல், பெரியோர் மதிப்பு.
- சிம்மம்:- நண்பரால் உதவி, நற்செய்தி, தூரப் பயணம்.
- கன்னி :- அவசர முடிவு, மனச் சோர்வு, பகைவரால் கேடு.
- துலாம் :- மனப் பயம், நோய் அதிகரிப்பு, பணமுடை.
- விருச்சிகம்:- காரிய சித்தி, நினைத்தது நடத்தல், தேக ஆரோக்கியம்.
- தனுசு:- பொருள் வரவு, மகிழ்ச்சி அதிகரிப்பு, சுபச் செலவு.
- மகரம்:- வீண் பிரச்சினை, மனக்குழப்பம், அரச பயம்.
- கும்பம் :- காரியத்தடை, தொழிலில் நட்டம், அவமானப்படல்.
- மீனம்:- விருந்துணவு, நண்பர்கள் உதவி, நினைத்தது நடத்தல்.

## உலக உணவுத்திட்டத்தின் உலர் உணவு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய்ப் பகுதியில் மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்கான தை மாதத்திற்குரிய உலக உணவுத் திட்ட உலர் உணவுப் பொருட்கள் தற்சமயம் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்று வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு மானிப்பாய் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கான சென்ற மாதத்திற்கான உலர் உணவுப் பொருட்களே தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மீள்குடியமர்ந்த மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (104)

# வடக்கில் இனவாதத்தைப் பரப்புவதற்கு முயற்சி தமிழ் ஊடகங்கள் கவனம் செலுத்த வேண்டும்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)

வடக்கில் மீண்டும் இனவாதத்தைப் பரப்பும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கின்றோம். எனவே, இவ்விடயங்கள் குறித்து முக்கியமாகத் தமிழ் ஊடகங்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: 30 வருடங்களின் பின்னர் வடக்குக் கிழக்கில் ஜனநாயகம் மலர்ந்துள்ளது. ஜனநாயக ரீதியில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சிமன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இந் நிலையில் வடக்கில் மீண்டும் இனவாதத்தைப் பரப்பும் வகையில் தீவிர முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. இது தொடர்பில் ஊடகங்கள் கவனம் செலுத்தவேண்டும். முக்கியமாக தமிழ் ஊடகங்கள் இது விடயத்தில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அவ்வாறான முயற்சிகளை நிராகரிக்க வேண்டும். வடக்கில் மீண்டும் இனவாதத்தைப் பரப்பும் முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கின்றோம். இந்தத் தேர்தல் ஏன் தீர்க்கமானது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது இலங்கை அரசியல் மிகவும் ஸ்திரமானது என்பதற்கான மக்களின் சான்றிதழை சர்வதேசத்துக்கும் காட்டும் தேர்தலாகவே இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. மக்களின் சான்றிதழ் இந்தத் தேர்தல மூலம் எமக்கு கிடைக்கும்

# கடனட்டை மோசடியில் ஈடுபட்ட மேலும் 2 ரோமானியர் கைது

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களிலும் கடனட்டை மோசடியில் ஈடுபட்டுவந்த மேலும் இரு ரோமானிய நாட்டு பிரஜைகள் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கையில் கடனட்டை மோசடியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் ரோமானிய பிரஜை ஒருவர் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப் பட்டிருந்தார்.

கடனட்டை மோசடியில் ஈடுபடுவதற்கு மேலும் இரு ரோமானிய பிரஜைகள் இலங்கை வந்துள்ளனர் என அவர் வழங்கிய தகவலை அடுத்து குறித்த இரு ரோமானிய பிரஜைகளும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மிகவும் சூட்சுமமான முறையில் கடனட்டையின் இரகசிய இலக்கங்களைப் பெற்றுக் கொண்டு இந்த ரோமானியப் பிரஜைகள் நிதிமோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பல கடனட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைத் திணைக்களப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நிதி மோசடியில் ஈடுபட்ட ரோமானிய பிரஜைகள் கைது செய்யப்பட்டதன் காரணமாக பல நிதிமோசடிச் செயல்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக குற்ற விசாரணத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்ற விசாரணைத் திணைக்களப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

# வங்கிக் கணக்கு முடக்கம்

(கொழும்பு)

சுங்கச் சட்டத்தை மீறி 10 ஆயிரம் லட்சத்துக்கும் அதிகமான நிதியை வெளிநாடுகளுக்கு கடத்த முயற்சித்த வர்த்தகர்கள் குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது குறித்து வர்த்தகரின் 15 வங்கிக் கணக்குகளைக் கண்டுபிடித்து அதனை இரத்து செய்துள்ளனர்.

விசாரணைக்குத் தலைமை தாங்கும் சட்டமா அதிபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றிற்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட பிரதான சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர் நிபந்தனைகள் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சோதனைச் செயற்பாடுகளில் குறைபாடு அனல்மின் நிலைய திறப்புவிழா ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதி திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் ஆரம்ப திகதி ஒத்தி வைக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது மேற்கொள்ளப் பட்டுவருகின்ற சோதனைக் கால செயற்பாடுகளில் பல குறைபாடுகள் அவதானிக்கப் பட்டமையே இதற்கான காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அங்கு இதுவரையில் பயன்படுத்துப்பட்டு வந்த எண்ணெய்க்குப் பதிலாக நிலக்கரி பயன்படுத்த ஆரம்பித்த வேளையில் இந்தப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் இவற்றை சீர் செய்வதற்கும் மேலும் மில்லியன் கணக்கான நிதி தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுக் கல்லில் தமது பெயரைப் பொறிக்க வேண்டாம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத்திட்டம் தோல்வியைச் சந்திக்கும் என்பதாலேயே இந்தத் தீர்மானத்தை அமைச்சர் மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே இந்த வேலைத் திட்டத்தை அமைச்சர் பசில் ராஜபக்ஷ பொறுப்பேற்று நடத்திய காலப்பகுதியில் பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இதற்கான சீன நிறுவனம் வழங்கிய பொருட்களுக்குப் பதிலாக உத்தரவாதம் அற்ற தரம் குறைந்த பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் விளைவாகவே தொடர்ச்சியாக நுரைச்சோலை நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையம் குறைபாடுகளுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# தியத்தலாவ விமானப் படைமுகாமில் மாணவ கடெற் பயிலுநர்களுக்கு பயிற்சி



(கொழும்பு)

தியத்தலாவ பயிற்சி முகாமில் மாணவ கடெற் பயிலுநர்களுக்கு விமானப்படை பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இந்தப் பயிற்சியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

சுமார் 40 பாடசாலைகளைச் சேர்ந்த 1000 மாணவர்களுக்கு விமானப்படை இங்கு பயிற்சிகளை வழங்கி வருகிறது.

ம்ட்டக்களப்பு முஸ்லிம் கல்லூரி மாணவர்களும் இந்தப் பயிற்சிக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி இவர்களுக்கான பயிற்சிகள் தியத்தலாவ விமானப்படை முகாமில் ஆரம்பமாகின.

விமானப்படையின் தியத்தலாவ பயிற்சி முகாம் கட்டளை அதிகாரியும் பயிற்சிகளுக்கான கட்டளை அதிகாரியுமான குறூப் கப்டன் லங்கா கொடிப்பிலி மற்றும் விமானப்படையின் கடெற் பயிலுநுர்களுக்கான இணைப்பாளர் ஸ்குவாட்ரன் லீடர் ஜினேந்திர ரணசிங்க ஆகியோரின் மேற்பார்வையின் கீழேயே இந்தப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

# பாலியல் துஷ்பிரயோகங்கள் விசாரணை நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பல் உடனுக்குடன் விசாரணை நடத்த வேண்டும் என பெண்களுக்கு எதிரான வன்முறைகளை களையும் சமூகம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த யுத்த காலத்தின் போது வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. யுத்த கால பெண்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சட்ட மூலத்தின் அடிப்படையில் இந்தச் சட்டம் அண்மையில் சபையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிறுபிள்ளைகளைக் காண்பித்து பிச்சையெடுக்கும் பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

சிறு பிள்ளைகளைக் காண்பித்து அதன் மூலம் பொதுமக்களின் அனுதாபத்தைப் பெற்று பிச்சையெடுக்கும் பெண்களுக்கு எதிராக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமென அதன் தலைவி திருமதி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

பிள்ளைகள் தங்கள் சிறு பராயத்தை சுதந்திரமாகக் கழிப்பதற்கான பிறப்புரிமையைப் பெற்றுள்ளார்கள். அந்த உரிமையை அப்பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்க்குக் கூட பறித்து விட முடி யாது என்று சிறுவர் பாதுகாப்புச் சட்டம் வலியுறுத்துகின்றது.

வீதியில் கைக்குழந்தைகளையும் சிறுபிள்ளைகளையும் வைத்துக்கொண்டு பிச்சையெடுக்கும் பெண்களை அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள



பொலிஸ் நிலையங்களில் இருக்கும் சிறுவர் பராமரிப்பு மற்றும் மகளிர் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்து சம்பந்தப்பட்ட பெண்களை நீதிமன்ற உத்தரவின் பெயரில் இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைத்து பிள்ளைகளை சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் சேர்த்து அவர்களை நல்ல முறையில் பராமரிப்பார்கள்.

இரண்டு வார காலத்தில் அப்பெண் போதைவஸ்து உபயோகித்தல், அவற்றை விற்பனை செய்தல், சிறு திருட்டுகள், விலைமாதர் தொழில் புரிகின்றமை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றம் இப்படியான தொழிலில் ஈடுபடலாகாது என்று எச்சரித்து பிள்ளைகளையும் தாய்மாரிடம் மீண்டும் ஒப்படைத்து விடும்.

அதேவேளையில், மேலே குறிப்பிட்ட குற்றச்செயல்களில் இப்பெண்கள் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கித் தண்டிக்கும். தாய் சிறையில் இருக்கும் காலத்தில் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மிகவும் கவனமாக வளர்ப்பார்கள் என்று திருமதி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

# கால்பந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)


பாதுகாப்பு படை தலைமையகம் மற்றும் யாழ்ப்பாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான நட்புறவு சுற்றுப் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பலாலி படைத் தலைமையக எம்.ஜ.சி. அணியும் பாடுமீன் அணியும் மோதின.


விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாடுமீன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கிங்ஸ் ஸ்ரார் அணியும், ரெட்றேஞ்ஜர் அணியும் மோதின. இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ரெட்றேஞ்ஜர் அணி வெற்றிபெற்றது. (மி)


**உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடக்க விழாவின் சில பதிவு**







# இறுதிப் போட்டி இன்று



(படப்பிடிப்பு: சுரேஸ்)

(யாழ்ப்பாணம்)

கெக்கிராவ மத்திய மகாவித்தியாலயம் மற்றும் அநுராதபுரம் மத்திய கல்லூரி அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. இதன் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட 13 வயதுப் பிரிவின் நான்கு அணிகளுக்கிடையிலான 25 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரிலேயே மேற்படி அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் மற்றும் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் இப்போட்டித் தொடர் நடைபெற்றது.

சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை நடைபெற்ற முதல் போட்டியில் பொலநறுவை றோயல் கல்லூரியும் கெக்கிராவ மத்திய கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் கல்லூரி அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கெக்கிராவ மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 25 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எக்கநாயக்க 94, விதரன 54 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய றோயல் கல்லூரி அணி 19.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்று 116 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் டசுன் 29, கம்சஜித் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது போட்டியாக யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் அநுராதபுரம் மத்திய கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமையக் களமிங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட 25 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டினேஜன் 30, செலுமியல் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வீரசிங்க, தென்னக்கோன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி 22 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் இன்ரரட்ண 40 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மயூரா ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் இறுதிப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு 50 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகளில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கச் செயலாளர் எம்.ஏ. ரவூப், இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி எம்.எவ். கபூர், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் சிவநாதன், மாஸ்கொம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிகால் ப்த்திரகே, இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும், இலங்கை வங்கியின் விளையாட்டு மேம்பாட்டு அதிகாரியுமான பிரண்டன் குறூப் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்,20)

# வலய மட்டத்திற்கு தகுதி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய நான்கு அணிகளும் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளன. வலய மட்டப் போட்டிகள் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (17)




# வெற்றிபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளுக்கு முன்னர் நடைபெற்ற ஆண்களுக்கான மரதன் மற்றும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு: க. கிரிசாந், அ. பிரசாந், அ. அபிநவன், பி. பிரசாந், கு. லிபிசன், க. கஜாகரன், சு. ரமேஸ்வரன், ர. சத்தியப்பிரியன், இ. சுகர்சன், த. சுபகாந்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்றோர் விபரம்: க. சிந்துஜா, ர.திவ்யா, கு. சயந்தி, ம. நிகஸ்திகா, த. மேரி கொலஸ்ரிகா, செ. சிந்துஜா, மு. வஜிதா, தி. துஷாந்தினி, ஆ. கீர்த்திகா. (மி)

# முதல் முறையாக நடைபெறும் "கரம்" இருநாள் பயிற்சிப்பாசறை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரம் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தேசிய கரம் விளையாட்டு சம்மேளனம் இரண்டு நாள் பயிற்சிப் பாசறையினை யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக நடாத்தி வருகின்றது.

இப்பயிற்சி நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி 4.00 மணி வரை நடைபெற்றதுடன் இன்றும் நடைபெறுகின்றது. நேற்றைய முதல் நாள் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் கழகத்தினர் என 50இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெறவிரும்புபவர்கள் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பயிற்சிப் பாசறையின் பயிற்றுநர்களாக தேசிய கரம் சம்மேளனத்தின் உத்தியோகத்தர்களான றொகினி மத்தாயஸ், எ.ரி.எம். றெஸ்மி, எம். செரிப்ரின், அருசக்க சுதசிங்க ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (52)

# ஜொலிஸ்ரார்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் சென்றல் அணிக்கெதிரான போட்டியில் யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வளர்மதி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் தொடரின் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரிலேயே யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி வெற்றிபெற்றது.

30 ஓவர்கள் கொண்ட போட்டியாக இப்போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வாமகன் 85, நிரஞ்சன் 49, பிரியதர்சன் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாதீஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 226 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பாலேந்திரா 34, விஸ்ணு 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரஞ்சன், மயூரன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, நாளைய போட்டியில் யாழ். பல்கலை அணியை எதிர்த்து யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி மோதவுள்ளது. (எஸ்)

# கோலாகல ஆரம்பம்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் தொடக்கவிழா பங்களாதேஷில் நேற்றுக் கோலாகலமாக நடைபெற்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்கள் நாளை தொடங்கவுள்ள நிலையில், டாக்கா அருகே மிர்பூர் மைதானத்தில் வண்ணமயமான தொடக்க நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது. சுமார் 2 மணி நேரம் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரபல ராக் இசை நட்சத்திரம் பிரையன் ஆடம்ஸ், இந்திய இசை நட்சத்திரங்கள் சங்கர் மகாதேவன்-எசான்-லாய் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதனால் டாக்கா நகரமே விழாக் கோலம் பூண்டது. பங்களாதேஷ் பிரதமர் ஷேக்ஹசினா இந்தப் போட்டியை தொடங்கி வைக்கிறார். சர்வதேச கிரிக்கெட் சபைத் (ஐ.சி.சி.) தலைவர் சரத் பவார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் 14 நாட்டு அணிகளின் தலைவர்களும் வலம் வருகிறார்கள்.



# நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

(டுபாய்)

பயிற்சி ஆட்டத்தின் போது ஏற்பட்ட குழப்பங்கள், உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் போது ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரேமதாசா மைதான நிர்வாகிகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்த மைதானத்தில் இலங்கை - மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான பயிற்சி ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது ரசிகர்கள் உள்ளே வரும் நடைமுறையில் அதிக கெடுபிடிகள் இருந்ததால் சிக் கல் ஏற்பட்டது. மைதானத்துக்கு சுமார் அரை கி.மீ. தூரத்துக்கு முன்னால் உள்ள இடத்தில் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

இதுதவிர கிரிக்கெட் சபை அதிகாரிகள், பத்திரிகை யாளர்கள் உள்ளிட்டோர் உள்ளே வருவதிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம் இருந்தது. ஐ.சி.சி. பத்திரிகை தொடர்பு அதிகாரி ஒருவருக்கு மைதானத்துக்கு வர முதலில் அனுமதி மறுக்கப்பட்டது. இதுபோன்ற பல தேவையற்ற குழப்பங்கள் போட்டியின் போது ஏற்பட்டன.

போட்டி ஏற்பாடுகளிலும் பல குழப்பங்கள் இருந்ததாக உள்ளூர் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் போது இதுபோன்ற தேவையற்ற குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென மைதான நிர்வாகிகளுக்கு ஐ.சி.சி உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயத்தில் இலங்கை கிரிக்கெட் ஏற்பாட்டாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இனி வரும் ஆட்டங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாது என்பது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் ஐ.சி.சி. கூறியுள்ளது.


International Cricket Council

**சிநேகபூர்வ கிரிக்கெட்**

யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி இன்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. (எஸ்)

# அமெரிக்கத் தூதரக அதிகாரியை பாகிஸ்தான் விடுவிக்க வேண்டும்

## ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்து



(வொஷிங்டன்)

அமெரிக்கத் தூதரக அதிகாரி ரேமண்ட் டேவிசை பாகிஸ்தான் சிறையில் அடைத்த விவகாரத்தில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தலையிட்டுள்ளார்.

வியன்னா ஒப்பந்தத்தை மதிக்கும் வகையில் டேவிஸ் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றிய ரேமண்ட் டேவிஸ் கடந்த மாதம் இரண்டு பாகிஸ்தானியர்களைச் சுட்டுக்கொன்றார்.

இவ்வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார். அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், தற்காப்புக்காக சுட்டதாக கூறிய டேவிசின் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது.

இவ்விவகாரம் அமெரிக்கா - பாகிஸ்தான் இடையே சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை இவ்விவகாரத்தில் அமெரிக்காவின் உயரதிகாரிகள் மட்டுமே தலையிட்டிருந்த நிலையில், தற்போது அதிபர் ஒபாமாவே தலையிட்டு, பாகிஸ்தானுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது -

டேவிசின் விடுதலை என்பது மிக எளிதான வகை யில் செய்யக்கூடியது. அதாவது, நாடுகளுக்கிடையிலான சட்டபூர்வ நடவடிக்கைகள் குறித்த வியன்னா ஒப்பந்தத்தின் அடிப்படையில், அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் பல்வேறு நாடுகளில் பணியாற்றி வந்தாலும், அவர்கள் அந்த நாடுகளின் சட்ட வரம்புக்குள் வரமாட்டார்.

அவர்கள் மீதான குற்றம், அமெரிக்க சட்டபடி மட்டுமே விசாரிக்கப்படும். இதே நிலை தான் அமெரிக்காவில் உள்ள் பிற நாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கும் பொருந்தும். அதனால் இந்த எளிய வழியின் அடிப்படையில் டேவிஸ் விடுதலை செய்யப்பட வேண்டும். வியன்னா ஒப்பந்தத்தை அமெரிக்கா மதிப்பது போலவே, பிற நாடுகளும் மதிக்க வேண்டும். அதனால், டேவிஸ் விடுவிக்கப்படும் வரை இவ்விவகாரத்தில் செயலாற்றுவோம் என ஒபாமா தெரிவித்தார்.

# லிபியாவிலும் வெடித்தது போராட்டம்



(திரிபோலி)

எகிப்தின் அண்டை நாடான லிபியாவிலும் ஜனாதிபதி கடாபியின் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தப்பட்டுள்ளது. வட ஆப்பிரிக்க நாடான லிபியாவில் ஏறத்தாழ 40 ஆண்டு காலமாக ஆட்சி புரிந்து வருகிறார் முகமட் கடாபி. ஒரு புறம் டுனீசியாவும், மறுபுறம் எகிப்தும் உள்ள நாடு லிபியா. அந்த நாடுகளில் மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், லிபிய குடிமக்களும் ஆட்சி மாற்றம் குறித்து சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் போலிருக்கிறது.

கடந்த புதன்கிழமையை "கோப தினம்" என அறிவித்திருந்தனர் ஆட்சி எதிர்ப்பாளர்கள். கடந்த திங்கட்கிழமை முதலே கிழக்குப் பகுதியிலுள்ள பென்காசி எனும் நகரில் 4,000 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட போராட்டம் தொடங்கியது. புதன்கிழமை காலை அது 10,000 ஆக உயர்ந்தது.

அப்போது பொலிஸாரை நோக்கிக் கற்கள் வீசப்பட்டன. பொலிஸார் கூட்டத்தை நோக்கிக் கண்ணீர்ப் புகை உபயோகித்தனர். பின்னர் தண்ணீர்ப் பீரங்கியும் உபயோகப்படுத்தப்பட்டது. இதற்கும் பலனில்லாமல் போகவே, ரப்பர் தோட்டாக்கள் கொண்டு துப்பாக்கிச் சூடு நடததினர்.

இந்த மோதலில், 3 எதிர்ப்பாளர்களும், 10 பொலிஸாரும் காயமுற்றனர். மேலும் ஒருவர் காயமடைந்தார். ஆனால் இவர் யார் என அறிவிக்கப் படவில்லை.

அமைதியான முறையில் இருந்த எதிர்ப்பாளர்கள் இடையே இருந்த சில நாசகாரர்கள்தான் இந்தக் கலகங்களுக்கு காரணம் என அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

சிறைப்படுத்தப்பட்ட ஒரு வழக்கறிஞரின் விடுதலைக்கென இந்த எதிர்ப்பு தொடங்கப்பட்டது. இவர் பெயர் ஃபெதி தார்பேல். 1996 ஆம் ஆண்டு தலைநகர் திரிபோலியில் உள்ள அபு சலீம் சிறையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த கைதிகளுடைய குடும்பததாரின் வழக்கறிஞர் இவர்.

இப்போது தார்பேல் எதற்காக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. அவருடைய ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால் பென்காசி ஆர்ப்பாட்டம், பொலிஸார் நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டு, அதிபர் முகமது கடாபியின் ஆதரவாளர்கள் லிபியாவின் பல்வேறு பகுதிகளில் ஆதரவுப் பேரணிகள் நடத்தினர். 1969 ஆம் ஆண்டு மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றிய மன்னராட்சி யைப் புரட்சி மூலம் வீழ்த்தி முகமது கடாபி பதவிக்கு வந்தார்.

அன்றிலிருந்து மேற்கத்திய நாடுகளைக் கடுமையாக எதிர்த்து வருபவர். பாலஸ்தீனத்தின் ஆதரவாளரான அவர், மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான பயங்கரவாதத்தை ஆதரித்து வந்தார் எனக் கூறப்பட்டது.

# அரசியல் தஞ்சம் தேடிச்சென்றவர்களின் கப்பல் மூழ்கியதில் ஐம்பது பேர் உயிரிழப்பு



(மபுடோ)

தென் ஆபிரிக்காவுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் சென்ற அகதிகளின் கப்பல் கடலில் மூழ்கியதில் 50 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். ஆபிரிக்க நாடான சோமாலியா மற்றும் எத்திபோப்பியாவைச் சேர்ந்த 129 அகதிகள் தென் ஆபிரிக்காவில் குடியேறுவதற்காக கப்பலில் சென்றனர். மொசாம்பிக் அருகே அந்தக் கப்பல் சென்ற போது கப்பலில் விரிசல் ஏற்பட்டு உடைந்தது.

கப்பலுக்குள் தண்ணீர் புகுந்து கடலில் மூழ்கியது. கப்பலில் இருந்த அனைவரும் கடலில் மூழ்கினார்கள். இதைப் பார்த்த மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். 60 இற்கும் மேற்பட்டோரை அவர்கள் காப்பாற்றினார்கள். ஆனால் 50 பேர் கப்பலில் மூழ்கி இறந்து விட்டனர். அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. மீட்கப்பட்டவர்கள் மொசாம்பிக் நாட்டில் உள்ள பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்

## தினமொரு தகவல்



ICC Cricket World Cup 2011

சாந்தகுமாரன் சிறீசாந்த் உடனே புரிந்திருக்கும் யாரென்று. கடந்த ஞாயிற்றுக்கிழமை அவுஸ்ரேலியாவுக்கு எதி ரான பயிற்சிப் போட்டியில் ரிக்கி பொன்டிங் தொடர்பில் இவர் அவுட் கேட்க, அது மறுக்கப்பட உடனே ஆவேசம் கொண்டு பொன்டிங்குடன் வார்த்தையாடல் செய்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்போவதில்லை என்று கூறியுள்ளது. எனவே, ஒரு சர்ச்சை முடிந்துள்ளது. ஆனால், சிறிசாந்த் அநியாயத்துக்கு ஆவேசம் கொள்வது இது முதன் முறையல்ல. 2006 - 2007 தென் ஆபிரிக்காவின் அன்ரி நெல்லைப் பார்த்து துடுப்பைக் காட்டி அங்கசேஷ்டைகள் புரிந்தது இவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது. உள்ளூர் இருபதுக்கு இருபது போட்டியொன்றில் இவரும் ஹர்பஜனும் ....... வேண்டாம் அசிங்கம்.

சிறிசாந்த் எந்த ஒரு ஆட்டத்திலும் துடுப்பாட்ட வீரரைப் பார்த்துத் தேவையில்லாமல் முறைபது எல்லோரும் பார்த்துப் பார்த்து வெறுத்துப்போன விடயம். இவர் நல்லதொரு பந்து வீச்சாளராக இருந்தாலும்கூட அதைவிட பேசப்படுவது இவரது மைதான அநாகரிக செயல்முறைகள் தான்.

துடுப்பாட்ட வீரனின் மன ஒருங்கிணைப்பைக் குலைப்பது தான் பந்து வீச்சாளரின் நோக்கம். அதறகாக இப்படியாகப் பந்து வீச்சாளர்கள் நடந்து கொள்வதுண்டு. சிறிசாந்த், கிளைன் மக்ரா பந்து வீசும்போது இத்தகைய நடவடிக்கையை எப்படிக் கையாளுவார் என்று பார்த்துப் படித்துக் கொள்ளலாம். இன்னும் எத்துறையோ வீரரின் துடுப்பாட்ட வீரரை நிலை குலைக்கும் பாணிகளை உதாரணம் காட்டலாம்.

இதைவிட இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். யூனுஸ கான், அஜே ஜடேஜா, மக்காயா என்ரினி... இப்படி அடுக்கிக்கொண்டு போகலாம். எவ்வளவு சந்தோஷமாக மைதானத்தில் நிற்பார்கள். .... எங்கள் பையன் லசித்மலிங்க, அவரது பந்து வீச்சில் ஆறு அடித்தாலும் ஒரு சிரிப்புச் சிரிப்பார். அடுத்த பந்தில் அற்புதமான யோக்கர்போட்டு விக்கெட்டை எகிறப் பண்ணிவிட்டும் அதே சிரிப்புச் சிரிப்பார்.

ரசிகர்களுக்கு அது ஒரு விருந்தாகவே அமையும். சிறிசாந்த் மைதானத்தில் பழகும் தன் பாணியை மாற்றிக் கொண்டால் ஐந்நூறு விக்கெட்டுகள் சாய்ப்பது அவருக்கு சர்வ சாதாரணம்.


10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல.3

அனுப்ப வேண்டிய முகவரி:-

தினமுரசு

விளையாட்டு அரங்கு,

இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அவுஸ்ரேலியா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறப்போகும் அணி எது?

2) இப்போட்டியின் ஆட்ட நாயகன் யார்?

பெயர்: ....................

முகவரி : ....................

போ.இல : ....................

விடைகள் : 01) ....................

02) ....................

உங்கள் விடைகளை 20 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.

# தமிழக மீனவர்களை விடுவிக்காவிடின் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம்!

## பாரதீய ஜனதா எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கவில்லை என்றால், போராட்டத்தை தீவிரப் படுத்துவோம் என, பா.ஜ.க மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து, பா.ஜனதா கட்சி சார்பில் டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், பா.ஜனதா மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ், இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்படத் திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



இலங்கை அரசைக் கண்டித்தும், சிறைவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் அவரகள் கோஷங்களை எழுப்பினார்கள்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு, சுஷமா சுவராஜ் ஏற்கனவே கடும கண்டனம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் -

இலங்கைப் படையினரால் இந்திய மீனவர்கள் துன்புறுத்தப்படுவது இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள நல்லுறவைப் பாதிக்கும். இலங்கையில் அமைதியும், வளமும் பெருக வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் இதுபோன்ற நிகழ்வுகள், இருநாட்டு உறவில் பதற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், எங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம். இந்திய மீனவர்களுக்கு எதிரான கொடுமையை பா.ஜனதாவோ, இந்திய அரசோ பொறுத்துக் கொள்ளாது என்றார்.

# இலங்கை கடற்படையுடனான கூட்டு ரோந்து சாத்தியமில்லை

## இந்திய கிழக்குத் தளபதி தெரிவிப்பு

(மண்டபம்)

இலங்கைக் கடற்படையுடன் கூட்டு ரோந்துக்கு சாத்தியமில்லை என, இந்திய கடலோர காவல்படையின் கிழக்கு பிராந்திய கொமாண்டர் எஸ்.பி.சர்மா கூறினார்.

மண்டபம் வந்துள்ள அவர், சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் ஹோவர் கிராப்ட் ரோந்துக் கப்பல் மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

மண்டபம் நிலையத்தில் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின் நிருபர்களிடம் கூறியதாவது -

இந்திய கடலோர காவற்படையின் மண்டபம் நிலையம் முக்கியமானதாக உள்ளது. எதிர்காலத்தில் இதை விரிவாக்கம் செய்ய வாய்ப்புள்ளது. தமிழக மீனவர்கள் 106 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய, இலங்கை அரசுகள் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் மன்னார் வளைகுடா உள்ளிட்ட 21 தீவுகளும் ராடர் மூலம் கண்காணிக்கப் படுகின்றன.

காரைக்கால், புதுச்சேரி பகுதியில் இந்திய கடலோர காவற்படைக்கென புதிய துறைமுகங்கள் கட்டும் பணி நடந்து வருகிறது. இலங்கை கடற்படையினர் எமது கடல் எல் லைக்குள் நுழைவது சாத்திய மில்லை. 1984 இல் எமது கடல் எல்லைக்குள் நுழைந்த, இலஙகை கடற்படையின் ரோந்து படகை சிறைபிடித்துள்ளோம். இலங்கை கடற்படையுடன் கூட்டு ரோந் துக்கு சாத்தியமில்லை.

ஆறு மாதத்திற்கு ஒரு முறை டில்லியில் எமது பாதுகாப்பு அதிகாரிகளும், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளும் சந்தித்துக் கொள்கிறோம்.

இலங்கைக் கடற்படையும் நாமும் தகவல் பரிமாற்றத்தின் கீழ் சர்வதேச கடல்பகுதியில் ஒருங்கிணைந்த கண்காணிப்பில் ஈடுபட்டால், தமிழக மீனவர்கள் தாக்கப்பட வாய்ப்பில்லை என




# ஐவர் கைது

(மதுரை)

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதைக் கண்டித்து, மதுரையில் இந்திய இளைஞர் பேரவை சார்பில் இலங்கையின் தேசியக்கொடி எரிப்பு போராட்டம் நடைபெற்றது.

மதுரை பெரியார் பஸ் நிலையப் பகுதியில் இலங்கையின் தேசியக்கொடியை எரித்த இந்த அமைப்பைச் சேர்ந்த 5 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

# மாண்புமிகு மாசிமக விரதம்



உலகெலாம் நிறைந்து விளங்கு கின்ற எல்லாம் வல்ல சிவபெரு மானைக் குறித்து அனுட்டிக்கப் படும் விரதங்களில் இன்றைய மாசிமகமும் ஒன்றாகும். இந்த விரதம் மகிமையும் மாண்பும் மிக்க ஒரு சிறப்பான விரதமாகும்.

வெள்ளிக்கிழமையும், பௌர்ணமியும் இணைந்துள்ளதால் இன்றைய மாசிமக நன்னாள் மிகவும் உன்னத உயர்நிலையைப் பெறுகின்றது. இவ்விரதம் அனுட்டிப்பதால் புத்திர சந்தானம் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இதனை அனுட்டிக்க விரும்புவோர் காலை எழுந்து புண்ணிய புனித நீராடி சந்தியா வந்தனம் முடித்துச் சிவாலய தரிசனஞ் செய்யவேண்டும். முழுநாளும் சிவ சிந்தனையுடன் தேவார திருவாசகங்களைப் பாராயணஞ் செய்து கொள்ளுதல் நல்லது.

இந்த விரதம் பற்றிய ஒரு வரலாற்றுக் கதையும் வழக்கிலுண்டு. முன்னொரு காலம் ஒருமுறை வருணபகவானைப் பிரம்மகத்திதோஷம் பீடித்துக் கொண்டதாம். இதனால் அவர்படும் வேதனையைக் கண்ணுற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடவே அவர் எழுந்தருளி வந்து வருணபகவானைப் பிரமகத்தி தோஷத்தின்றும் விடுவித்தார்.

சமுத்திரத்தின் நடுவே பிரமகத்திதோஷத்தால் கட்டுண்டிருந்த வருணன் தனக்குக் கிடைத்த விடுதலையை எண்ணி மகிழ்ச்சி மிகுதியால் "பிரபுவே நான் விடுவிக்கப்பட்ட இந்த நல்லநாளில் கடல், நதி, சமுத்திரம், குளம் முதலானவற்றில் புனித நீராடி உம்மை வழிபடுகின்ற அடியார்களுக்கு நிலையான வீடுபேற்றைக் கொடுத்து, முத்தியளிக்க வேண்டும். இது என்னுடைய பணிவான விண்ணப்பம்" என்று கூறியருளினார்.

அதுகேட்ட பரமசிவன் திருவுள்ளமிரங்கி 'அவ்வண்ணமேயாகுக' என்று வரமீந்தருளினாராம். அந்த அருமையான நாள்தான் இம் மாசி மகம் எனக் கருதப்படுகிறது. இன்றைய மாசிமக நன்னாளில் புண்ணிய புனித நீராடி ஈர ஆடையுடன் இறைவனை மும்முறை வலம் வந்து வணங்கினால் நினைத்த காரியம் ஈடேறும் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே இந்தப் புனித நாள் சைவ சமயிகளின் பிரதான விரத நன்னாளாகும். இது சிறப்பான புனித விரதமாதலால் அனுட்டிப்பவர்கள் மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால்பழம் அருந்தலாம். மதியம் உணவுண்ணும்போது ஒரு சிவனடியாருக்கும் அமுதளித்துத் தானதர்மஞ்செய்தல் வேண்டும்.

இன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்தால் புண்ணியம் என்றும் பெறற்கரிய முத்திப்பேறு கிடைக்கும் எனவும் கருதப்படுகிறது. பிரகஸ்பதி எனப்படுகின்ற வியாழபகவான் மகநட்சத்திரத்துடன் கூடி கும்பராசிக்குச் செல்லும்போது மகாமகம் என்ற புண்ணிய காலம் உருவாகிறதாம். ஆதலால் இவ்விரதம் மிகச் சிறப்பானதெனக் கூறப்படுகிறது.

எனவே, நாம் புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருப்பதால், அதன் சிறப்பையுணர்ந்து இதுவரை நாள் போனது போகட்டும், இன்றுமுதல் நாம் புனிதராகி நேர்வழியில் நடப்போம் என்று உறுதி பூண்டு, இன்றைய மாசிமக விரதத்தை முறைப்படி நோற்று நற்கதி பெறுவதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

- சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்




உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள்
கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி
எமக்கு அனுப்பி வையுங்கள்.
தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று
புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை
மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் கையொப்பம்

# பெரும்போக விவசாயச் செய்கையை ஊக்குவிப்பதற்கு துரித நடவடிக்கை



(கொழும்பு)

மஹிந்த சிந்தனைக்கு அமைவாக, நல் விளைச்சலைத் தரக்கூடிய பெரும்போக விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு வடமாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப் பெரும்போக விவசாயத்தின் போது 29,320 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படுவதுடன், 32,611 மெட்ரிக்தொன் அறுவடையும் எதிர் பார்க்கப்படும் அதேவேளை இம்முறை 26,300 ஏக்கர் பயிரிடப்பட்டுள்ளது. வெங்காயம் மற்றும் மிளகாய் முறையே 1685 ஏக்கர் பயிரிடப்படுவதுடன் இது வரைக்கும் 1015 ஏக்கர் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் எள்ளுப்பயிர்ச் செய்கை 2850 ஏக்கரில் பயிரிடப்பட்டு 1195 மெட்ரிக்தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இப் பயிர்ச்செய்கைகள் தொடர்பான விசேட கூட்டம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் கடந்த 7ஆம் திகதி யாழ் கமத்தொழில் பயிற்சி மையத்தில் இடம் பெற்றது.

கமத்தொழில் பயிற்சி மையத்தை மேலும் தரமுயர்த்துவதற்கும் பற்றாக்குறையான ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம் மையத்தை தரமுயர்த்த வடமாகாண சபையால் 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதைவிட வடக்கில் விவசாய கண்காட்சியை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இக் கூட்டத்தில் கமத்தொழில் அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.சுப்பரமணியம், யாழ் விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், கமத்தொழில் பயிற்சி மையத்தின் அதிகாரிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் உட்பட வடமாகாண கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# 37 நெடுஞ்சாலைகள் யாழில் மீள்நிர்மாணம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் 37 நெடுஞ்சாலைகள் சீன அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைக்கிடையே 18.5 கிலோமீற்றர் நீளமான வீதி, யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறைக்கிடையே 33.79 கிலோமீற்றர் நீளமான வீதி,யாழ்ப்பாணம் மற்றும் பலாலிக்கிடையே 17.3 கிலோமீற்றர் நீளமான வீதி மற்றும் புத்தூர் மீசாலைக்கிடையே 13.68 கிலோமீற்றர் நீளமான வீதி ஆகியன சீன அரசாங்கத் தின் உதவியுடன் மீள்நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 25.74 கிலோமீற்றர் நீளமான பூநகரி வீதியும், 17.12 கிலோமீற்றர் நீளமான நாவற்குழி -காரைதீவு- மன்னார் வீதியும், 13.67 கிலோமீற்றர் நீளமான மானிப்பாய் கைதடி வீதியும் மற்றும் 27.4 கிலோமீற்றர் நீளமான வெள்ளை நெல்லிப்பல்லை வீதியும் மீள் நிர்மாணம் செய்யப்படும்.

# செயலிழக்கச் செய்யப்பட்டன

(முறிகண்டி)

முறிகண்டி - ஜெயபுரம் வீதியில் 4ஆம் கட்டைப்பகுதியில் வீதியோர பற்றைகளுக்குள் காணப்பட்ட 21 குண்டுகள் கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப் பட்ட குண்டுகள் படையினரின் குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை வெடிக்க வைக்கப்பட்டன. இதனால் முறிகண்டி-ஜெயபுரம் வீதியூடான போக்குவரத்து ஒரு மணி நேரம் தாமதமானது.

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவை அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள வறியகுடும்பங்களைச் சேர்ந்த 20 இளைஞர், யுவதிகளுக்கு இலவசமாக கணனிப்பயிற்சி,தையல் பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் பேரவையினால் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை கண்டி வீதியிலுள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப்பேரவையிலுள்ள செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு பேரவைத் தலைவர் அறிவித்துள்ளார். (28)

# மனு கிடைத்தது

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் அவரது மனைவி சமர்ப்பித்த கடிதம் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சபையின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்ஸ்கீ இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் கடிதம் தொடர்பில் மேலதிக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் எந்தப் பகுதியில் ஒரு ஊடகவியலாளர் காணாமல் போனாலும், அது கண்டனத்துக்கு உரிய செயலே என அவர் தெரிவித்துள்ளார்.

# தென்னை நடுகைச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்த ஒப்பந்தம்



(கொழும்பு)

ஆறாம் ஆண்டு மாணவர்களை தென்னை மர நடுகையில் ஈடுபடுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கல்வி அமைச்சிற்கும் தெற்கு அபிவிருத்தி அமைச்சுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்ப குமார தெரிவித்தார்.

"திவி நெகும" குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி அலகுகளை அறிமுகம் செய்வது தொடர்பான கூட்டம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தெங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றபின் அவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தினூடாக மாணவர்கள் வளர்த்த மரங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மாணவர்களின் பெயர்களில் அரச வங்கி ஒன்றில் வைப்பிட உள்ளதாகவும், 6வருட காலத்தில் தென்னை மரத்திலிருந்து பயன்பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்



திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அண்மைக்கால வெள்ளத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 19 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும் பாலானவை அறுவடை செய்யப்படும் நிலையிலிருந்தவையாகும். இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமுகமாக வடக்கிற்கான ஜனாதிபதி செயலணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் - மடு ரயில் பாதையும் நவீன முறையில் புனரமைப்பு



(மன்னார்)

காலி-மாத்தறை அதிவேக ரயில் பாதையைப் போன்று மடு,மன்னாருக்கான ரயில் பாதையும் நவீனமயப்படுத்தப்படும் என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா கூறினார்.

காலி - மாத்தறைக்கு இடையில் அதிவேக ரயில் பாதையை நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்துப் பேசுகையிலேயே இந்திய உயர் ஸ்தானிகர் இவ்வாறு கூறினார்.

இத்தகைய அதிவேக ரயில் பாதை கொழும்புவரை நீடிக்கப்படும் பின்னர் அது மடு, மன்னாருக்கும் நீடிக்கப்படும் என அவர் கூறினார்.

மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம செய்யக்கூடிய இந்த ரயில் காலி ரயில் நிலையத்திலிருந்து மாத்தறை நோக்கி நேற்று பகல் 12.30 மணிக்குப் புறப்பட்டது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம், போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க, இந்திய நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மோஹன் திவாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# விபரங்களை சமர்ப்பிக்கவும்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் வசிக்கும் ஊனமுற்றோர், போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டோர், விதவைகள் ஆகியோருக்கான உதவித்திட்டமொன்றை வழங்குவதற்கு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை தீர்மானித்துள்ளது.


மேற்குறிப்பிட்டவர்கள் தங்களுடைய விபரங்களை அந்தந்தக் கிராம சேவையாளர்களின் உறுதிப்படுத்தலுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (28)

# யாழில் சிறுவர் நூலக அபிவிருத்திக்கு புலமைப்பரிசில் வழங்கியது சிங்கப்பூர்

சிறுவர் நூலக அபிவிருத்தி தொடர்பாக புலமைப் பரிசில் ஊடாக சிங்கப்பூர் சென்று பயிற்சி பெற்ற யாழ்.பொது நூலகத்தைச் சேர்ந்த நூலகர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.பொது நூலக அபிவிருத்தி தொடர்பாக, சிங்கப்பூர் உயர்ஸ்தானிகருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக யாழ்.பொதுசன நூலகர்களுக்கு மேற்படி பயிற்சி பெறும்வாய்ப்பு கிட்டியிருந்தது. இதன்பயனாக யாழ்.பொதுசன பிரதான நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் ஆறு நூலகர்கள் சிங்கப்பூருக்குச் சென்று சிறுவர் நூலக அபிவிருத்தி தொடர்பான விசேட பயிற்சியினைப் பெற்றுக்கொண்டனர்.

நேற்று காலை அமைச்சரின் யாழ். பணிமனைக்கு வருகை தந்த மேற்படி நூலகர்களுடன் கலந்துரையாடிய அமைச்சரவர்கள் யாழ். பொதுசன நூலக சிறுவர் பிரிவினை அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியின் ஊடாக எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்து திட்டமிட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். இச்சமயம் யாழ்.பல்கலைக்கழக பதில் உபவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் ஆகியோரும் உடனிருந்தனர்.



நேற்றைய சந்திப்பினை ஓர் ஆரம்ப கூட்டமாக கருதி சிறுவர் நூலக அபிவிருத்தி செயற்பாட்டினை ஆரம்பிப்போம் எனத் தெரிவித்த அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா அவர்கள் அடுத்த கூட்டத்தில் நூலக அபிவிருத்திக் குழுவினர் கல்விமான்கள் ஆகியோரை உள்ளடக்கி விரிவான சந்திப்பினை மேற்கொள்வோம் எனத்தெரிவித்தார்.

## பரவும் மர்ம நோய்; தொடரும் மரணம்

### அநுராதபுரத்தில் புதிய அவலம

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தில் மர்ம நோயொன்றினால் கடந்த 3 நாட்களுக்குள் 4 பேர் உயிரிழந்துள்ளதாக வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சலினால் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## அதிக கடல் அரிப்பு; மேற்குகரை முதலிடம்

(கொழும்பு)

நாட்டின் மேற்கு கரையோர பிரதேசத்தில் அதிகமான கடலரிப்பு காணப்படுவதாக கடலாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் அனில் பிரேமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக முதல்வர்...

நேற்று அனுப்பி வைக்கப்பட்ட இக்கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு:

பிரியமுடன் உங்களுக்கு வணக்கம்!...

தமிழக மக்களின் முதல்வராகிய உங்கள் மீது ஈழத்தமிழ் மக்கள் தீராத பற்றுதலைக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழக மக்களின் அரசியல் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் நீங்கள் மத்திய அரசிலும் பங்கெடுத்து தமிழக மக்களுக்கு சிறந்த வழி காட்டலைக் கொடுத்து வருவது கண்டு நாம் அகம் மகிழ்கின்றோம்.நீங்கள் தேடிய இந்த வழிமுறையே ஈழத்தமிழ் மக்களுக்கும் ஏற்புடைய ஒன்று.

ஆகவே கொள்கை வழியில் ஒன்று பட்டு நிற்கும் நான் உங்களோடு அவசரமும், அவசியமும் மிக்க விடயம் ஒன்றை மனந்திறந்து பேச விரும்புகின்றேன்.

தமிழகம் ஈழத்தமிழ் மக்களின் வேரடி மண்! தமிழக மீனவ மக்களுக்கும் ஈழத்தமிழ் மீனவ மக்களுக்கும் இடையில் கடற் பரப்பில் நிகழ்ந்து வரும் தகராறுகள் எமக்கு துயரங்களை தந்து கொண்டிருக்கின்றன. கடல் எல்லை தாண்டி வந்து எம் தமிழக மீனவ உறவுகள் ஈழத்தமிழ் மீனவ மக்களின் கடற்பரப்பில் தொழில் செய்து வருவதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு, வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் இது வரை வந்த முறைப்பாடுகள் குறித்து நீங்கள் அறிவீர்கள்.

இது குறித்து நான் தமிழக மீனவ சங்கங்களுக்கும், ஈழத்தமிழ் மீனவ மக்களின் சமாசங்களுக்கும் இடையில் சமரசப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வந்திருந்த தருணத்தில்...

பேசும் மொழியாலும், செய்யும் தொழிலாலும் ஒன்று பட்டு நிற்க வேண்டிய இரு தரப்பு உறவுகளுக்கும் இடையில் இருக்கும் உறவுப்பாலம் உடைந்து சிதறாமல் இருக்க நாம் முயன்று வரும் சூழலில்...

எம் காதில் விழுந்த செய்தி எமக்கு மிகுந்த மனவருத்தங்களைத் தந்திருந்தது. இலங்கை கடல் எல்லை தாண்டி வந்ததாகக் கூறப்படும் தமிழக மீனவ. உறவுகளை பருத்தித்துறை கடற்றொழிலாளர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக எமக்குத் தகவல் வந்தது.

தகவல் அறிந்த நான் உடனடியாகவே சம்ப இடத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்தேன்! இலங்கை கடற்றொழிலாளர்களோடு இது விடயம் குறித்து விசாரித்த போது நடந்த சம்பவம் குறித்து எம்மிடம் எடுத்துரைத்தார்கள்.

கடந்த கால அழிவு யுத்தத்தின் போது தொழில் ரீதியாக பாதிப்படைந்திருந்த அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் அழிவு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், மறுபடியும் தாம் தமது கடற்பரப்பில் தற்பொழுது சுதந்திரமாகத் தொழில் புரிந்து வருவதாகவும், ஆனாலும், இலங்கைக் கடற்பரப்பில் நுழையும் சில தமிழக மீனவர்களால் தமது கடல் வளங்களை அனுபவிக்க முடியாமல் இருப்பதாகவும் தமது மனத்துயரங்களை வழமை போல் என்னோடு பகிர்ந்து கொண்டனர்.

இதேவேளை, தமிழக மீனவ உறவுகளோடு நான் பேசி அவர்களது நிலைமைகள் குறித்தும் அக்கறையோடு அறிந்து கொண்டேன். அப்போது தாம் இலங்கை கடல் எல்லை

தாண்டி வந்ததன் தவறுகளுக்காக தாம் வருந்துவதாகவும் என்னிடம் தெரிவித்திருந்தனர்.

பொலிஸாரின் காவலில் இருக்கும் தமிழக மீனவ மக்களின் அத்தியாவசிய தேவைகளில் பொலிஸாருடன் இணைந்து தாமும் கவனம் செலுத்துவதாக பருத்தித்துறை கடற்றொழிலாளர்கள் சம்மதம் தெரிவித்திருந்தமை எனக்கு பெரும் ஆறுதலை தந்திருந்தது.

இந்நிலையில், தமிழக மீனவ உறவுகள் விடுவிக்கப்பட்டு அவர்களை வீடு திரும்ப அனுமதிப்பதற்கான முயற்சிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றேன். எனது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்றும் நம்புகின்றேன்.

இதேவேளை, கடல் எல்லைகளைத் தாண்டும் தவறான செயல்களை முழு மையாக தடுத்து நிறுத்துவதன் ஊடாக தமிழக மற்றும் இலங்கை மீனவ மக்களுக்கு இடையிலான தகராறுகளையும் தடுத்து நிறுத்தி நீடித்த நேச உறவுகளை வளர்க்கவும் முடியும் எனவும் நான் நம்புகின்றேன். இதற்கு தங்களின் ஒத்துழைப்பும் கட்டாய தேவையாகும்.

இரு தரப்பு மீனவ மக்களிடையேயும் நிரந்தரமான நேச உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட நேரடியாகவே உங்கள் பிரதிநிதி ஒருவர் இங்கு அனுப்பிவைக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

உங்கள் பிரதிநிதியாக ஒருவர் இங்கு வரும்போது இரு தரப்பு மீனவ மக்களும் பகைமை மறந்து பரஸ்பரம் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கான சூழல் ஒன்றை உருவாக்கும் இணக்கப்பேச்சுக்களுக்கான ஏற்பாட்டாளராக நான் செயற்படுவேன் என்றும் உறுதியுடன் உங்களிடம் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவ்விடயங்கள் குறித்து கௌரவ ராஜ்சபா உறுப்பினர் கனிமொழி அவர்களுடனும் நான் தொடர்பு கொண்டு எடுத்து விளக்கியிருக்கின்றேன்.

ஈழத்தமிழ் உறவுகளின் உணர்வுகளை புரிந்து கொண்டவர் நீங்கள். அதே போல் தமிழக உறவுகளின் உணர்வுகளையும் புரிந்து கொண்டவன் நான்.

இரு தரப்பு உறவுகளும் இடையறாது நீடித்து நிலைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகவும்,

கடந்த கால அழிவு யுத்தத்தினால் துயரங்களை சுமந்து நின்ற ஈழத்தமிழ் மீனவ மக்களின் சார்பான மனிதாபிமான வேண்டுகோளாகவும்,

இம்மடலை உங்களுக்கு நான் அனுப்பி வைக்கிறேன் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நட்புறவுடன் மீனவர்...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.இதன்போது இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்ட எஸ்.எம்.கிருஷ்ணா, அவர்களை விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், இரு நாட்டு அரசும் நட்புறவு முறையில் இப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ் விகாரம் குறித்து பேசியுள்ளார்.

அதேவேளை, வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவத்தைக் கண்டித்து நாகை, காரைக்கால் பிரேதேசங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் மீனவர்கள் இரண்டாவது நாளாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரின் தாக்குதலை தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், இச் சம்பவத்தைக் கண்டித்து இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயற்சி செய்த தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின்...

25 வருட உள்நாட்டு யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாகத் தெரிவிக்க வேண்டும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனிடம் மூன்று முக்கியமான கட்சிகளைச் சேர்ந்த 41 பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்ப மிட்டு அறிக்கை ஒன்றைக் கையளித்துள்ளார்கள்.

போர்க்குற்றங்கள் நடை பெற்றதாகக் கூறப்படும் இலங்கையில் ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம், ஐரோப்பிய ஆணைக்குழு, சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு, மற்றும் சட்டவிரோத படுகொலைகள், சட்டத்திற்குப் புறம்பான தண்டனைகள் குறித்த ஐநாவுக்கான விசேட பிரதிநிதி ஆகியோர் முன்வைத்த நம்பத்தகு சாட்சியங்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தைக் கோரும் முக்கியமான ஆவணங்களாக உள்ளன.

பாரபட்சமற்ற முறையிலும் ஆரோக்கியமான வகையிலும் இக்குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வது சமாதானம் உருவாவதற்கும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் அத்தியாவசியமானது என இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

## அத்துமீறிய இந்திய...

தீர்வை ஏற்படுத்தும் பொருட்டு, இந்திய மீனவர் பிரதிநிதிகளை அழைத்துக்கொண்டு கனிமொழியை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அச்சமயம் விளக்கமறியலில் இருப் பவர்களையும் விடுதலை செய்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட கனிமொழி இவ் விடயம் தொடர்பாக தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியுடன் ஆலோசனை நடாத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்ததுடன், இவ்விடயம் தொடர்பாக உத்தியோகபூர்வ அழைப்பு ஒன்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்தியக் கடற்தொழிலாளர்கள் விவகாரம் தொடர்பாக விரைவில் பேச்சுவார்த்தை மூலம் சமரசம் காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அதுவரை யாழ்.மீனவர்கள் வன்முறையில் ஈடுபடவேண்டாம் எனவும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.


மேற்படி விடயம் தொடர்பாக பருத்தித்துறை முனைப்பகுதி தேவாலயத்தில் நேற்று மாலை கடற்தொழிலாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இழுவைப்படகு மூலம் நடைபெறும் மீன்பிடித் தொழிலினால் உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். இது விடயமாக தமிழக முதல்வரின் மகள் கனிமொழியுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும், உள்ளூர் மீனவர்கள் கூட, இழுவைப் படகு மூலமான மீன்பிடியைக் கைவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கடற்தொழிலார்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கடலோர விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும், கடலில் வான் தோண்டப்பட வேண்டும் என்றும், தாம் மீன் பிடியில் ஈடுபடும்போது நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கைகளை அமைச்சரிடம் முன்வைத்தனர்.

மேற்படி கடற்தொழிலாளர்கள் சந்திப்பில் கடற்தொழில் திணைக்களப் பரிசோதர்கள், அதிகாரிகள் உட்பட யாழ். மாவட்டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையான கடற்தொழிலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (100)




நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# சரத் பொன்சேகா விவகாரத்தில் சட்டம் நேரத்துக்கு நேரம் மாறுகிறது

## கவலை கொள்கிறார் முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வா



(கொழும்பு)

சரத் பொன்சேகா விவகாரத்தில் சட்டம் நேரத்திற்கு நேரம் மாற்றமடைந்து செல்வதாக முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிக்காக சரத் பொன்சேகா ஆற்றிய சேவையைப் பாராட்டும் வகையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக சரத் பொன்சேகா மீது எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர வேண்டுமாயின் பொலிஸில் சரத் பொன்சேகாவிற்கு எதிராக முறைப்பாடு செய்திருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகா விவகாரத்தில் நேரத்திற்கு நேரம் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டமைப்பின் இந்தியப் பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்ட அரசியல் குழு ஒன்று அடுத்த வாரம் இந்தியா செல்கின்றது.

சென்னையில் தங்கி இருக்கும் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனைச் சந்தித்து இக்குழுவினர் மந்திராலோசனை நடத்தவுள்ளனர்.

குறிப்பாக அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து தலைவருக்கு நேரில் விளக்கம் கொடுக்கவுள்ளனர்.

அத்துடன் இந்தியாவின் முக்கிய அரசியல்வாதிகள் சிலரையும் சந்திக்கவும் உத்தேசித்துள்ளார்.

### மாதகலில் பிடிபட்ட

# இந்திய மீனவர்களுக்கு இருவார தடுப்புக்காவல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 26 பேருக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மல்லாக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸார் நேற்று மாலை நீதிபதியின் வீட்டுக்குச்சென்று அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

இவர்கள் அனைவரையும் இரண்டு வார விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் 26 பேரும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# கடற்படை சிப்பாய் மரணம்

(கொழும்பு)

திருமலை - சம்பூர் கடற்படை பயிற்சிமுகாமைச் சேர்ந்த கடற்படை வீரர் ஒருவர் பழைய சுவரொன்று இடிந்து விழுந்தால் நேற்று உயிரிழந்துள்ளார்.

கிஷான் குணவர்தன என்பவரே உயிரிழந்தவர் ஆவார். 19 வயதான இவர் குருநாகலைச் சேர்ந்தவர் ஆவார்.

மூதூர் பதில் நீதிவான் மஹ்ரூப் விசாரணைகளை மேற்கொண்டார். பலியான கடற்படை வீரரின் சடலம் திருமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்க செக் குடியரசு பயணம்


(கொழும்பு)

சர்வதேச ஜனநாயகவாதிகளின் சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செக் மக்கள் குடியரசிற்கு செல்லவுள்ளார்.

எதிர்க்கட்சிக் காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இந்த செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் செக்



குடியரசின் அமைச்சர்கள் மற்றும் ஜனநாயக சங்கத்தைச் சேர்ந்த ஏனைய தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சர்வதேச ஜனநாயகவாதிகளின் சங்கத்தின் உபதலைவராக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

பொகவந்தலாவை ரொக்கில் பிரதேசத்தில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் அண்மையில் காணாமல் போனதாகக் கூறப்படும் ஒருவரின் சடலமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பிலான நீதிவான் விசாரணைகள் நேற்று இடம்பெற்றது.

குறித்த நபர் காணாமல் போனமை தொடர்பில், அவருடன் பணியாற்றிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இந்திய மீனவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு

## இளவாலைப் பொலிஸார் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு மாதகல் கடற்தொழிலாளர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனையைப் பெறும் பொருட்டு இளவாலைப் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

மேற்படி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை, மாதகல் கடற்தொழிலாளர்களால் 26 இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டதுடன், அவர்களது 7 படகுகளும் மீட்கப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தின் போது, இரு பகுதி மீனவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும், இதன்போது இரு பகுதியிலும் பலர் காயமடைந்தாகவும் தெரிய வருகின்றது.

இதனை யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளன வட்டாரங்களும் உறுதி செய்தன.

எனவே, இவ்விடயம் குறித்து சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனையைப் பெறும் பொருட்டு அவர்கள் பொலிஸாரினால் யாழ்.வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டிருக்கலாம் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, வடமராட்சி கடற்பரப்பிலும் கடந்த செவ்வாய்க்கிழமை அன்றும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 108 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை மீனவர்களால் பிடிக்கப்பட்டதுடன், 18 இழுவைப் படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தமை தெரிந்ததே. (பா)

# குப்பைகள் அகற்ற விசேட செயற்திட்டம்

குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்காக செக் குடியரசுடன் இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவிருப்பதாக, அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செக் குடியரசின் இலங்கை தூதுவருக்கும், சுற்றாடல்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யுத்தத்தின்போது....

மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையிலான சர்வதேச கட்டமைப்பை உருவாக்குவது குறித்து ஆராயுமாறு இக்குழு இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இப் போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் வன்முறைகள் குறித்த ஆவணம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையில் இக் குழு சமர்ப்பித்திருந்தது.

இக் குறிப்பிட்ட ஆவணத்தில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என இக் குழு வலியுறுத்தியுள்ளது.

போரின் போது பாலியல் வன்முறைகள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதை மனிதவுரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகளுக்கு எதிரான ஒரு குற்றமாகக் கருதுமாறு இக்குழு ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பாலியல் வன்முறைகளை ஒரு குற்றமாகக் கருத்தில் எடுக்க மறுப்பது பெண்கள் மீதான பாரபட்சத்தையே வெளிப்படுத்துவதாக அமைவதாக இக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இடமபெற்ற எல்லாப் போர்க்குற்றங்களும் முழுமையாக விசாரணை செய்யப்பட்டு, குற்றம் இழைத்தவர்கள் நீதியின் முன்னிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் இக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தகைய போர்க்குற்றங்களை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் ஆதாரங்கள் பலவற்றை முன்வைத்துள்ள போதிலும், இக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என இக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, படைத்தரப்பினரால் பெண்கள் மீது பாலியல் வன்முறை பிரயோகிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்புணர்வு இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது என அரசியலமைப்பு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதவுரிமை நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் Anna von Gall வலியுறுத்தியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது புலிகளின் பெண் உறுப்பினர்கள் பலர் இலங்கை படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களின்...

ஊடகவியலாளர்கள் திரண்டிருந்தனர். எனினும், அவர்களுடைய கேள்விக் கணைகளுக்கு முகங்கொடுக்க ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மறுத்துவிட்டனர்.

ஐ.தே.கட்சி பிரதித்தலைவர் கரு ஜெயசூரியவை நோக்கி யாழ்.ஊடகவியலாளர்கள் பலவிதமான கேள்விகளைத் தொடுத்தனர்.

அவற்றில் சில கேள்விகள் இவ்வாறு அமைந்தன....

1. தமிழ்மக்கள் தொடர்பாக ஐ.தே.கட்சியின் அரசியல் தீர்வு நிலைப்பாடு என்ன?

2. தீவகத்தில் நடைபெற்ற கொலையுடன் தொடர்புடைய நபரை ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளராக நிறுத்தி இருக்கிறீர்களே இது குறித்து கட்சியின் விளக்கம் என்ன?

3. ஐ.தே.கட்சிக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தமிழ் மக்களுடைய தீர்வுத்திட்டம் தொடர்பாக ஏதும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதா? என்றவிதமான கேள்விகள் கேட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதற்கு ஐ.தே.கட்சி பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய பதிலளிக்கத் தயாராக இருக்கவில்லை.

எனினும், யாழ்.மாவட்ட ஐ.தே.கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் முதலாவது பிரசார ஊடகவியலாளர் மாநாடு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நேற்றுக் காலை காரைநகரில் உள்ள மகேஸ்வரன் அமுத சுரபி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில், ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, ஐ.தே.க. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இருந்தும் ஊடகவியலாளர் மாநாடு நடைபெறவில்லை. யாழில் போட்டியிடுகின்ற ஐ.தே.கட்சியின் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு மட்டுமே நடைபெற்றது.

இதில் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அதற்கு நேரமும் ஒதுக்கப்படவில்லை. இந்தச் சம்பவத்தினால் உள்ளூர் ஊடகவியலாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன், பெரும் விசனமும் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கற்றலுக்கான சில குறிப்புகள்

## இளமைப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. பசு | - | கன்று |
| 2. ஆடு | - | குட்டி |
| 3. காகம் | - | குஞ்சு |
| 4. குருவி | - | குஞ்சு |
| 5. நாய் | - | குட்டி |
| 6. கோழி | - | குஞ்சு |
| 7. பாம்பு | - | குட்டி |
| 8. குதிரை | - | குட்டி |
| 9. மீன் | - | குஞ்சு |
| 10. நெல் | - | நாற்று |
| 11. பனை | - | வடலி |
| 12. வாழை | - | குட்டி |
| 13. கிளி | - | குஞ்சு, பிள்ளை |
| 14. அணில் | - | குஞ்சு, பிள்ளை |
| 15. தவளை | - | பேத்தை, குஞ்சு |
| 16. புலி | - | குட்டி, குருளை |
| 17. மான் | - | குட்டி, கன்று |
| 18. குரங்கு | - | குட்டி, பறள் |
| 19. யானை | - | கன்று, குட்டி, போதகம் |
| 20. தென்னை | - | கன்று, பிள்ளை |

## ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான சொற்கள் சில

1. அகதி
2. அறிவாளி
3. எதிரி
4. ஒருவர்
5. சனாதிபதி
6. சட்டத்தரணி
7. சோம்பேறி
8. தைரியசாலி
9. நோயாளி
10. பிரதிவாதி
11. புலவர்
12. மந்திரி
13 வழக்காளி
14. அமைச்சர்
16. உலோபி
17. ஏழை
18. காரியதரிசி
19. குற்றவாளி
20. சுத்தவாளி
21. ஞானி
22. நீதிபதி
23. பாவி
24. புத்திசாலி
25. மந்திரவாதி
26. மேதை
27. வாதி

## இணை மொழிகள்

1. மேடு பள்ளம்
2. அங்கும் இங்கும்
3. ஊண் உறக்கம்
4. நன்மை தீமை
5. இன்ப துன்பம்
6. அக்கம் பக்கம்
7. உண்டு உடுத்து
8. கண்ணுங் கருத்தும்
9. உயர்வு தாழ்வு
10. வரவு செலவு
11. வாழ்வு தாழ்வு
12. சீரும் சிறப்பும்
13. மேல் கீழ்
14. மலையும் மடுவும்
15. விருப்பு வெறுப்பு
16. எலும்பும் தோலும்
17. எதிரும் புதிரும்
18. கோணல்மாணல்
19. உற்றார் உறவினர்
20. பொருள் பண்டம்
21. நோய் நொடி
22. தான தருமம்
23. அடிமுடி
24. கள்ளங்கபடு
25. ஏழை எளியவர்
26. சுகதுக்கம்
27. கணக்கு வழக்கு
28. ஆதி அந்தம்
29. பழக்க வழக்கம்
30. பட்டம் பதவி
31. கனவு நனவு
32. அல்லும் பகலும்
33. ஏற்றம் இறக்கம்
34. கரடு முரடு
35. ஈவு இரக்கம்
36. பயிர் பச்சை

## எதிர்ப்பாற் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. ஒருவன் | - | ஒருத்தி |
| 2. குணவான் | - | குணவதி |
| 3. பாங்கன் | - | பாங்கி |
| 4. பிரான் | - | பிராட்டி |
| 5. தாதன் | - | தாதி |
| 6. நம்பி | - | நங்கை |
| 7. பாடகன் | - | பாடகி |
| 8. பிரியன் | - | பிரியை |
| 9. புனிதன் | - | புனிதை |
| 10. பெருமான் | - | பெருமாட்டி |
| 11. பேரன் | - | பேத்தி |
| 12. மணவாளன் | - | மணவாட்டி |
| 13. மருத்துவன் | - | மருத்துவிச்சி |
| 14. மித்திரன் | - | மித்திரை |
| 15. மூதாளன் | - | மூதாட்டி |
| 16. விருத்தன் | - | விருத்தை |
| 17. வீட்டுக்காரன் | - | வீட்டுக்காரி |
| 18. திருவாளன் | - | திருவாட்டி |
| 19. பாக்கியவான் | - | பாக்கியவதி |
| 20. பாணன் | - | பாடினி, விறலி |
| 21. பாலகன் | - | பாலகி, பாலிகை |
| 22. வீரன் | - | வீரி, வீராங்கனை |







தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011 | பகுதி - I, II விடைகள்

# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்



## பகுதி -I

1) நனைந்த விலங்குகள்
2) மக்கள் குடை கொண்டு செல்லல்
3) சேற்றுமயமான வீதிகள்
4) 1
5) 3
6) 3
7) 3
8) 3
9) 1
10) 3
11) காகம்
12) இரண்டு ரூபாய் நாணயம்
13) புத்தகம்
14) அன்னாசி
15) 
16) 
17) ரூபா 51
18) 3 நிமிடத்தில்
19) ரூபா 96
20) 12 செ.மீ
21) 120 நிமிடங்கள்
22) ரூபா 39
23) I. மா II. பலா
24) I. துடுப்பாட்டம் II. கிளித்தட்டு
25) I. மல்லிகை II. அல்லி
26) I. இலங்கை வங்கி II. மக்கள் வங்கி
27) I. ஆந்தை II. வௌவால்
28) 3
29) 2
30) 1
31) 1
32) I. வேம்பு II. புளி
33) I. பனை II. தென்னை
34) I. ஆனையிறவு II. புத்தளம்,
35) 1
36) 2
37) 1
38) 2
39) 2
40) 1

## பகுதி -II

I)
1) மேனி
2) இடமும் பொருளும்
3) துக்கம்
4) இடம் + எங்கும்
5) நித்தம் நித்தம்
6) சுத்தம் உள்ள இடத்தில்
7) உடலில் உறுதியுடையவர்
8) நீ
9) பெறுகின்றாய்
10) கவிமணி சி.தேசிக விநாயகம்பிள்ளை

II)
1) சீடன் அப்பெரியவரை ஆச்சரியத்துடன் பார்த்தான்.
2) எம்மில் பலர் அதற்கு முன்பு கண்டிக்குச் சென்றதே இல்லை.
3) பாபு வாழைப்பழத்தோலை வீதியில் வீசிவிட்டான்.
4) வானம்பாடி மயிலின் கூட்டத்தை வாழ்த்திப் பாட்டுப் பாடியது.
5) கழுதை மீது அமர்ந்திருந்த தாத்தா கீழே இறங்கினார்.

III) 1) வெற்றிலை 2) முயற்சி 3) பிண்ணாக்கு 4) ஆராய்ச்சி 5) கற்பூர

IV) 1. Books 2) Eye, Mouth

V) 1) மாலை வணக்கம் 2) தயவு செய்து அங்கே போங்கள 3) இது என்ன?

VI) 1) தம்பி 2) கதிரை 3) இருங்கள் 4) குடியுங்கள் 5) புத்தகம்

VII) 1) 2 2) 4 3) 3 4) 1 5) 4

VIII) 1) சீதேவியார் செங்கழுநீர் 2) நன்னாரி 3) முருங்கை 4) முள்முருங்கை

IX) 1) வாத்து 2) பருந்து 3) சேவல் 4) மரங்கொத்தி

X) 1) 30 2) 20 நிமிடம் 3) ரூபா 16.00 4) 30 5) 8 6) 237 7) 5023 8) 800 9) 4830 மி.லீ 10) வியாழன்

XI) 1) வரைபில் நிழற்றுக 2) 15 3) 200 4) 170

XII) கருத்துள்ள தெளிவான வாக்கியங்களுக்கு புள்ளியிடுக.

## புள்ளியிடல்

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | | |
| வினா 01 | 10 X 01 | = 10 புள்ளி |
| வினா 02 | 05 X 02 | = 10 புள்ளி |
| வினா 03 | 05 X 01 | = 05 புள்ளி |
| வினா 04 | 03 X 01 | = 03 புள்ளி |
| வினா 05 | 03 X 02 | = 06 புள்ளி |
| வினா 06 | 05 X 02 | = 10 புள்ளி |
| வினா 07 | 05 X 01 | = 05 புள்ளி |
| வினா 08 | 04 X 01 | = 04 புள்ளி |
| வினா 09 | 04 X 01 | = 04 புள்ளி |
| வினா 10 | 10 X 02 | = 20 புள்ளி |
| வினா 11 | இல.01 | = 08 புள்ளி |
| வினா 11 | இல.02-04 | = 03 புள்ளி |
| வினா 12 | 06X 02 | = 12 புள்ளி |
| | மொத்தம் | 100 புள்ளி |

# விசேட பயிற்சிப் பரீட்சை - தமிழ்மொழி

**பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக.**

1) அணில் அழகாக இருக்கும்
2) மரம் அசைந்து ஆடியது
3) பூ மலர்ந்தது

**பின்வரும் வாக்கியங்களை எவ்வகை வாக்கியங்கள் என அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

(தன்மை ஒருமை, படர்க்கை ஒருமை, படர்க்கைப் பன்மை, தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை, முன்னிலை ஒருமை)

1) நான், யான்
2) நாம், யாம், நாங்கள்
3) நீ
4) நீர், நீவிர், நீங்கள்
5) அவன், அவள், அது
6) அவர்கள், அவைகள்

**பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

1) நெல் + வயல் :.......................
2) பல் + பொடி :.......................
3) மலை + உச்சி :.......................
4) மரம் + வேர் .......................
5) முள் + செடி :.......................
6) தமிழ் + சொல் :.......................
7) மண் + குடம் :.......................
8) மலர் + செண்டு :.......................

**பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.**

1) வடகிழக்கு - ............+............
2) கப்பற்கூலி - ............+............
3) பச்சைக்கிளி - ............+............
4) மனமாற்றம் - ............+............
5) தேன்மொழி - ............+............
6) வாழைக்காய் - ............+............
7) தென்மாகாணம் - ............+............
8) காவியுடை - ............+............

**பின்வரும் சொற்கள் எவ்வகைப் பெயர்ச்சொற்கள் என எழுதுக.**

1) உணவு, மரம், காற்று, புத்தகம், மோகன், நிசார், நளினி, கமலா .......................
2) வீடு, ஊர், நகரம், நாடு, இலங்கை, இந்தியா, கொழும்பு, கண்டி .......................
3) திங்கட்கிழமை, தை, மாதம், இரவு, பகல், காலை, நேற்று, நாளை .......................
4) கை, மூக்கு, கிளை, இலை, தலை, வேர், கண், பூ .......................
5) கறுப்பு, வட்டம், நன்மை, இனிப்பு .......................
6) ஆடல், பாடல், படித்தல், மகிழ்ச்சி, செலவு, வரவு, வருகை, காட்சி .......................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) 

இக்குறியீட்டின் விளக்கம்

1. தொடர்பாடல் 2. சமாதானம் 3. பாதுகாப்பு 4. சரணாலயம்

2) 

இக்குறியீட்டின் விளக்கம் யாதெனத் தெரிவு செய்க.

1. இலங்கை போக்குவரத்துச் சபை
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
3. இலங்கை அஞ்சல்





**தொடர் மொழிக்கு ஒரு மொழியை எழுதுக.**

1) அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது - .......................
2) ஒருவர் / ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது - .......................
3) பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் - .......................
4) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது - .......................
5) மற்றவர்களைப் பற்றிய அக்கறையில்லாதவன் - .......................
6) வீண்செலவு செய்பவன் - .......................
7) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை - .......................
8) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் - .......................
9) அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் - .......................
10) சுதந்திரமற்று வாழ்பவன் - .......................
11) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் - .......................
12) கடவுள் இல்லை என்று வாதிடுபவன் - .......................
13) வழக்கைத் தாக்கல் செய்பவன் - .......................
14) வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் - .......................

**பின்வரும் விழாக்கள் எப்போது கொண்டாடப்படும் என்பதை எழுதுக.**

1) இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா .......................
2) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா .......................
3) அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா .......................
4) எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா .......................
5) நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா .......................

**பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.**

1) இளனி :.......................
2) இங்கனம் :.......................
3) எண்ணை :.......................
4) காச்சல் :.......................
5) கத்தரிக்கோல் :.......................
6) கோடாலி :.......................
7) தீவாளி :.......................
8) தேத்தண்ணி :.......................
9) பாவக்காய் :.......................
10) வெக்கம் :.......................

**பின்வரும் வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

1) அவர் ஓர் .......................ஆவார். இதில் கீறிட்ட இடத்தில் வரவேண்டியது எது?

1. பெண் 2. தந்தை 3. அறிஞர் 4. மனிதர்

2) உச்சரிக்கும்போது சொண்டு முட்டிக்கொள்ளும் சொல் எது?

1. அப்பா 2. அண்ணா 3. அக்கா 4. தங்கை

3) பின்வருவனவற்றினுள் எழுத்துச் சரியான சொல் எது?

1. புநர்வாழ்வு 2. அனுதாபம் 3. அநுமான் 4. அநாகரிகம்

4) பின்வருவனவற்றுள் பிழையான சொல் எது?

1. உடமை 2. தகமை 3. கடமை 4. பகைமை

5) பாட்டா தலைப்பா இடுவது வழக்கம். தலைப்பா என்பதன் திருத்தமான பதம் எது?

1. தலைப்பாவை 2. தளைப்பா 3. தலப்பா 4. தலைப்பாகை